வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாதி திங்கள் 17-ம் நாள் (2—10—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகிர் 10 | இதழ் 18

அரசாங்க

# மத்திய வங்கியில் தமிழருக்கு கதவடைப்பு

## அணிமையில் தெரிவு செய்யப்பட்ட 24 சிப்பந்திகளும் சிங்களவர்கள்!

## இன ஒதுக்கல் கொள்கை எல்லா இலாகாக்களுக்கும் தாவுகிறது

(சுதந்திரன் நிருபர்)

**இலங்கை மத்திய வங்கியில் தமிழர்கள் வேலை தேடிக்கொள்வது முயற்கொம்பாகிவிட்டது. இன ஒதுக்கல் கொள்கை அங்கு தீவிரமாக அமுல் செய்யப்படுகிறது. தமிழர்களுக்கு கதவடைப்பு பலமாக நடத்தப்படுகிறது.**

மத்திய வங்கியில் தமிழர்களும் சிங்களவர்களும் மற்றும் சாகியத்தாரும் வேலை செய்து வருவது தெரிந்ததே. இப்போது ஆட்களை வேலைக்கு எடுப்பதில் புதுக் கொள்கை ஒன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதாவது தேடிப் பிடித்து சிங்களவர்களையே தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

### தமிழர் மருந்துக்கும் இல்லை

அணிமையில் 24 சிப்பந்திகள் மத்திய வங்கியில் வேலைக்கு சேர்க்கப்பட்டார்கள். அத்தனை பேரும் சிங்களவர்கள். மருந்துக்குக்கூட ஒரு தமிழரும் இல்லை.

ஏன் தமிழர்களின் திறமை குறைந்துவிட்டதா? அல்லது தமிழர்கள் எவரும் வேலைக்கு விண்ணப்பிக்கவில்லையா? இரண்டும் இல்லை. பல தமிழர்கள் விண்ணப்பித்தார்கள்; திறமை காட்டினார்கள். ஆயினும் அவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

### அதிகாரி பதில்

"இது அபிப்பிராயத்தோ திறமையுள்ளவர்களைத் தெரிவு செய்யாமல் இன அடிப்படையில் சண்டவர்களை எல்லாம் வேலைக்கு எடுத்தால் வேலை தானும் ஒழுங்காக நடைபெறுமா?" என்று ஒரு மத்திய வங்கியின் பொறுப்பான அதிகாரியிடம் கேட்டபோது அவர் திருப்பி ஒரு கேள்வி கேட்டார்: "அரசாங்கக் கொள்கை உங்களுக்குத் தெரியாதா? நாங்கள் என்ன செய்யலாம்? போடப்படும் தாளத்துக்கு ஆட வேண்டாமா?"

### இலாகாக்களில் 'சிங்கள மினியா'

1961 ஜனவரியிலிருந்து சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அமுல் செய்யப்படவிருப்பதையொட்டி இப்பொழுதே பல இலாகாக்களிலும் 'சிங்கள மினியா' தொடங்கிவிட்டது. அநேகமான இலாகாக்களில் இப்பொழுது எல்லா அலுவல்களும் சிங்களத்தில் செய்யப்படுகின்றன. பிரசுரங்கள், அறிவித்தல்கள் எல்லாம் சிங்களத்தில் மட்டும் வெளியிடப்படுகின்றன.

அரசாங்க குமாஸ்தாக்களின் சேவை உயர்வையும் இந்தச் 'சிங்களப் பித்து' பாதிக்கிறது. குமாஸ்தாக்கள் இரண்டாம் வகுப்புக்கு சேவை உயர்வு பெறும் பரீட்சைகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழில் இல்லை. இதனால் தமிழ்மூலம் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்த குமாஸ்தாக்களுக்கு சேவை உயர்வு இல்லை என்று ஆகிறது. வருங்காலத்தில் சேவை உயர்வுப் பரீட்சை சிங்களத்தில் மட்டுந்தான் நடைபெறும் என்று தெரிகிறது. அப்போது இன்னுமொரு சாரார் பாதிக்கப்படுவார்கள்.



இந்திய வெளி விவகார உதவி மந்திரி திருமதி லக்ஷ்மி மேனன் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தபொழுது விமான நிலையத்தில் சுதந்திரன் புகைப் படப் பிடிப்பாளர் திரு. ராஜப்பவிடம் வகையாக மாட்டிக் கொண்டார். அவர் எடுத்த படத்தில் திருமதி லக்ஷ்மி மேனன் சுதந்திரன் வாசக நேயர்களுக்காகக் கையொப்பமிட்டுத் தந்திருக்கிறார்.

மத்திய தந்திக் கந்தோரில்

# தமிழருக்குப் பதவி போவதை தடுக்க குறுக்கு வழியில் முயற்சி

## சிங்களத்தில் கருமமாற்ற திடுதிப்பென்று ஏற்பாடு

## தமிழ் சிப்பந்திகள் வேலை விவரம் புரியாமல் திண்டாட்டம்

(சுதந்திரன் நிருபர்)

**மத்திய தந்திக் கந்தோரில் சீவ் டெலிகிராப் மாஸ்டர் (Chief Telegraph Master) பதவி தமிழர் ஒருவருக்குப் போவதைத் தடுக்க குறுக்கு வழியில் முயற்சி செய்து வருகிறார்கள். இதன் பிரகாரம் சீனியர் சுப்பர்வைஸிங் ஆபீஸர் (Senior Supervising Officer) திடுதிப்பென்று கடந்த செப்டம்பர் 23-ந் தேதி தொடக்கம் சிங்களத்தில் கருமமாற்றத் தொடங்கி அங்குள்ள தமிழ்ச் சிப்பந்திகளை ஒன்றும் புரியாமல் திக்குமுக்காட வைத்திருக்கிறார் என்று தெரிகிறது.**

மத்திய தந்திக்கந்தோரில் வேலை செய்யும் சிப்பந்திகள் தங்களுடைய அடுத்த நாள் வேலை என்ன, எத்தனை மணிக்கு வேலை தொடங்க வேண்டும் என்பன போன்றவைகளை சீனியர் சுப்பர்வைஸிங் ஆபீஸர் வைத்திருக்கும் குறிப்பேட்டில் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

### சிங்களத்துக்கு மாற்றம்

இவ்வளவு காலமும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வந்த குறிப்பேடு திடீரென்று கடந்த மாதம் 23-ந் தேதி தொடக்கம் சிங்களத்தில் எழுதப்பட்டு வருகிறது. இதைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாமல் அங்கு வேலை செய்யும் பல தமிழ்ச் சிப்பந்திகளும் திண்டாடுகின்றனர்.

### தமிழ்க் கொலை

இந்தத் திண்டாட்டம் ஒருபுறமிருக்க தமிழ்ப் பெயர்கள் சிங்களத்தில்

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர்ர் புர்ர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தனையராய் விளங்கினுர் வன்னியசிங்கம்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேச லிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் மூன்ருவது பகுதி இது.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இடக்குப் பேசி எதிரி கட்சியைத் தகர்ப்பவரையும், அடுக்குச் சொல்லாலும் சொல் அலங்காரத்தாலும் கருத்து வறுமையை மறைப்பவரையும் நாவ(ல்)லர் என மதியார் ஆழ்ந்த அறிவுடையோர். விஷயச் சிறப்பைக் கொண்டே பேச்சு வன்மையையும் எழுத்து வன்மையையும் கணித்தல் அவர் இயல்பு. அடுக்குச் சொற்களை அமோகமாகத் தொடுத்து, அபிநயங்களோடு, தங்குதடையின்றி எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒத்திசை (Rythm) அமைந்த வாக்கியங்களை உருட்டுவோரது சொற்பொழிவைக் கேட்டு ஓசையின் பக்கத்திலும் சொல் அலங்காரத்திலும் முழுகி, விஷயச் சிறப்பைக் கணியாமலே, சிறந்த மேடைப் பேச்சாளர் எனப் பெயர் சூட்டி விடுவர் ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கம் இல்லாதவர். பொது மக்களால் சிறந்த மேடைப் பேச்சு எனக் கருதப்படுவது விஷயச் சிறப்பு உடையதாகவும் வாய்க்கலாம்; விஷயச் சிறப்புக் குறைந்ததாகவும் இருக்கலாம்.

### மாணவன் திறமை

வன்னியசிங்கம் சிறந்த மேடைப்பேச்சாளர் ஆகக் கருதப்பட்டதில்லை. மேடைப் பேச்சில் மத்திமம் என்றே கருதப்பட்டார். ஒரு முறை கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் சிலர் சுற்றுப்பிரயாணம் சென்று கொண்டிருந்தோம். பஸ்ஸில் பொழுது போக்கு நிமித்தம் திறமைசாலியான ஓர் இளைஞன்—கொம்யுனிஸ்டு சார்புள்ளவன்—அரசியல் பேச்சாளர்களின்பாணியைப்பொருவப் பேசிக் காட்டலானுன். திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. கார்த்திகேயன் இருவரது பாணியும் காட்டப்பட்டன. இரண்டையும் அறிந்தவர்கள் பொருநனின் திறமையை வியந்தனர்.


பஸ்ஸிலுள்ளவர்கள் "வன்னியசிங்கத்தின் பாணி" என்று கேட்டார்கள். இளைஞன் முடியாது என்று கூறி விட்டான். எனக்கு மரியாதைக்காக மறுத்திருக்கலாம் என்று யாரோ கூறினுர்கள். எனக்கு ஆட்சேபமில்லை என்று தெரிவித்தும் பழைய பதிலே கிடைத்தது. காரணம் யாதாயிருக்கலாம் என்று நாங்கள் இரண்டொருவர் யோசிக்கத் தொடங்குகையிலேயே "அமிர்தலிங்கம் பாணி" என்ருர்கள் யாரோ. "சரி" என்றுஇரண்டொரு நிமிஷத்தில் தன்னைத் தயார் செய்து கொண்டு ஆரம்பித்து விட்டான். அப்புறம் "நாகநாதன் பாணி." இவையும் சபையோரது பாராட்டைப் பெற்றன.

### 'பொருவு'

பிறகு யாரோ "செல்வநாயகம் பாணி" என்ருர்கள். "அதுவும் முடியாது" என்று பதில் கிடைத்தது. "ஏன்?" என்று விடாமல் கேட்டதன் மேல் "இன்ன பாணி என்று அடையாளம் காட்டுவது கடினம்" என்று கூறினுன். விஷயம் விளங்கி விட்டது. திரு. செல்வநாயகத்தின்

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A.(Hons), (Lond), M. Litt

தமிழ்ப் பேச்சுக்கு மதிப்பு அவர் ஆழ்ந்து சிந்தித்துத் தேர்ந்த கருத்தைப் பிழையற வெளியிடுவது அது என்பதனுல் ஏற்பட்டது. வன்னியசிங்கத்தின் பேச்சு காரண காரியத் தொடர்பு காட்டி உவமை ஆதியன உபயோகித்தோ உபயோகியாமலோ ஒரு விஷயத்தை விளக்க முயல்வது.



1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி காலிமுகக் கடற்கரையில் நடந்த சத்தியாக்கிரகத்தின்போது அடிபட்டு, உதைபட்டு மிதிபட்டு, சட்டை கிழிபட்டு...... அமரர் வன்னியசிங்கம் வீற்றிருக்கிருர்.

"பொருவு" காட்டிய நால்வர் பாணியிலும் அபிநயங்கள், நொடி பாவனைகள் (Mannerisms), எல்லாச் சொற்பொழிவுகளிலும் சேவிக்கும் "கோயில் மேளச்" சொற்ருெடர்கள் போன்ற முத்திரை ஒன்ருே பலவோ உண்டு. பொருநன் பற்றிக் கொள்ள வாய்ப்பானவை இவை. இன்னரது பாணி என்ற முன்னறிவிப்பு இன்றிப் "பொருவு" காட்டினுலும் இன்னரது பாணி என்று சபையோர் அந்தந்த முத்திரைகளைக் கண்டதும் கூறி விடுவார்கள்.

### முத்திரையில்லை

நால்வரில் எவரது பேச்சையும் நான் கேட்டதில்லை. ஆகையால் எத்தனை பேர் எத்தனை முறை பொருவு காட்டியதைப் பார்த்திருந்தாலும் விஷயச் சிறப்புப் பற்றி எதுவும் கூற உரிமையில்லை. பொருவு காட்டப்படாத இருவர் பேச்சையும்—வன்னியசிங்கத்தின் பேச்சைக்கூட—ஒரே நாள் கேட்டிருக்கிறேன். இவர் பேச்சும் வெவ்வேறு பாணியேயானுலும் முத்திரை இல்லை. பொருநன் இலகுவிற்பற்றுக் கொள்ள வாய்ப்பானவை என முற்கூறிய அம்சங்களில் எதுவும் இல்லை. பேச்சுக்குப் பேச்சு மாறிவரும் விஷயமும் சொல்நடையும், [illegible] நடையைப் பற்றுவது? இன்ன பாணி என்று அடையாளம் காட்டுவது எப்படி?

### பெண்ணும் பேச்சும்

பொருநன் பற்றுதற்கு வாய்ப்பான அம்சங்களையே பொது மக்கள் மனமும் இலகுவிற் பற்றும். அதனுலேயே அவற்றை உடையபேச்சே சிறந்த மேடைப் பேச்சு எனக் கணிக்கப்படுகிறது. உண்மையில் அபிநயங்களும் சொல் அலங்காரங்களும் ஒரு பெண் அணியும் ஆபரணங்கள் போன்றவை. விஷயச் சிறப்பு இயற்கை உருவழகு போன்றது. உவமை முதலிய பொருளணிகள் கண்ணழகு கதுப்பழகு ஆதிய உறுப்பழகை ஒக்கும். உருவழகும் உறுப்பழகும் வாய்ந்தவளாயினும் அமைந்த ஆபரணுதி அலங்காரங்களில்லாதபோது புனையா ஓவியம் போல் பொலிவிழந்தவள் ஆவள் என்பது உண்மை. ஆயினும் அணிந்திருக்கும் ஆபரணுதிகளைக் கொண்டன்றி இயற்கை அழகைக் கொண்டே ஒரு பெண்ணின் அழகைக் கணிப்பது அறிவுடைமையாதல் போலப்பேச்சின் விஷயச் சிறப்பைக் கொண்டே பேச்சின் தரத்தைக் கணிக்க வேண்டும்; ஒரு பெண்ணின் ஆபரணங்களை இன்னெருத்தி அணியக் கண்டு ஆபரணத்துக்குரியவர்களின் அழகைப் பற்றி அபிப்பிராயம் கூறுவது எப்படி என்றெல்லாம் என் சிந்தனை படரலாயிற்று.

### கேள்வி பதில்

நான் கேட்ட வன்னியசிங்கத்தின் பேச்சை ஞாபகப்படுத்திக் கொண்டேன். அது கொட்டும் அருவி போலன்றி மெல்லக் குதித்தும் தவழ்ந்தும் செல்லும் நீரோட்டம் போலிருந்தது என்று நினைத்தேன். பேச்சு அலங்காரம் இல்லாவிட்டாலும் வன்னிய சிங்கத்தின் பேச்சில் விஷயச் சிறப்பு உண்டு.

தேர்தல் பேச்சுகளின் பின் சரமாரியாகக் கிளம்பும் கேள்விகளுக்குப் பதில் கூறுவதில் மட்டும் வன்னிய சிங்கத்துக்கு ஒப்புயர்வு இல்லை என்றும், அவர் கூறும் பதில் ஒவ்வொன்றும் ஆணித்தரமாயிருக்கும் என்றும் கூறக்கேட்டிருக்கிறேன். பிரசித்த முதலியார் திரு. செ. இராசநாயகம் அவர்களுடன் யாழ்ப்பாணச் சரித்திர விஷயமாகவும் நாவலர் பெருமானது அண்ணன் மகனுன திரு. த. கைலாயபிள்ளை அவர்களுடன் வேளாளர் வருண விஷயமாகவும் தந்தையார் முறையே இந்து சாதன, ஈழகேசரி பத்திரிகைகள் மூலம் நடத்திய வாதப் பிரதிவாதங்களில் எதிரி கிளப்பிய தடைகளுக்கு விடை கூறுவதில் அவர் கையாண்ட உத்திகளை அவதானித்து எவ்வளவு தூரம் பதிவிறுக்கும் திறமையை வளர்த்திருக்கக்கூடும்?

### குரவைப் பாட்டுகள்

கலையுள்ளமும் தமிழ், ஆங்கில இலக்கிய ரசனையும் தந்தையாரிடமிருந்து பெற்ற உலவாத கருவூலம். சிலசமயம் தூளியிலிடப்பட்ட என் தங்கையையோ இளைய தம்பியையோ நித்திரையாக்கும் பொருட்டுத் தூளியை ஆட்டும்போது சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாட்டுகளையே தாலாட்டுப் பாட்டுகளாகத் தந்தையார் பாடுவது ஞாபகம் இருப்பதால்தான் ஆறில்நூறில் ஒருநாள் அவர் சிறிது நேரம் தூளி ஆட்டுவதும் உண்டு என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. மூத்த பிள்ளைகள் இருவருக்கும் இத்தகைய தாலாட்டுக் கேட்கும் பாக்கியம்நிச்சயம் கிடைத்திருக்கும்; கிடையாமற் போக நியாயம் இல்லை. பிள்ளைகளைப் "பார்த்துக் கொள்ளும்" பொறுப்பைச் சிறிதும் விரும்பாத — என்றும் ஏற்காத—தந்தையார், பிள்ளைகள் மழலை பேசத் தொடங்கிய நாளிலிருந்தே வயதுக்கேற்ற சாதுர்ய வசனங்கள், பொன்மொழிகள் சொல்லிக் கொடுத்து அவற்றைக் கிளிப்பிள்ளைகள் போல் அவர்கள் மிழற்றுவது கேட்டு மகிழ்வர்.

### இலக்கிய ரசனை

பள்ளிப் பாடங்கள் பிள்ளைகட்குச் சொல்லிக் கொடுக்க ட்யூஷன் வாத்தியாரை ஏற்படுத்திப் பணம் செலவழிப்பாரேயொழிய ஒரு நேரம் தானும் சொல்லிக் கொடுக்க அவருக்கு வழங்காது. ஆனுல், இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள், உவமைகள் பழமொழிகள் கவிகள் ஆதியவற்ருல் தம் சம்பாஷணைக்குச் சுவையூட்டி, வயதுக்கேற்றபடி பிள்ளைகளுக்கு அவற்றை விளக்கி இலக்கிய ரசனையூட்டுவதுபோல் அவருக்கு விருப்பமான விஷயம் வேறு எதுவுமில்லை. எந்தச் சாதாரண நிகழ்ச்சியும் அவருக்குச் சிறந்த கவிதை ஒன்றையோ கவிதாபாகத்தையோ நினைவூட்டும். அதை அறிந்து அநுபவிக்கக் கூடிய வயது உடைய பிள்ளைகளுக்குச் சொல்லி அதிலுள்ள நயங்களை விளக்கி இன்புறுவார். எங்கள் தாயாருக்கு எழுத்துக் கூட்டி வாசிக்கவும் அதுபோலவே எழுதவும் தெரியுமேயன்றிக் கல்வி ஞானம் சூனியம் எனலாம். ஆயினும் கேள்விவாயிலாக அருஞ்சொற்கள், சொற்ருெடர்கள், உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், புராண இதிகாச கதைகள், அவை கற்பிக்கும் நீதிகள் எல்லாம் அறிந்திருந்தார். ஆகையால் அவரும் வேலை இல்லாத ஓய்வு நேரங்களில் இந்த இலக்கிய சர்ச்சைகளில் கலந்து அவற்றை ரசிப்பார்.

### தந்தையர் திண்டாட்டம்]

மைந்தர் இருவரும் ஆங்கில இலக்கியம் படிக்கத் தொடங்கியது முதல் ஆங்கில இலக்கியமும் பேச்சில் அடிபடும். தம்பியரைத் தொடர்ந்து தமக்கையரும் சிறிது ஆங்கிலம் கற்க முயன்ருேம். இலக்கியம் மட்டும், தரம் குறைந்தவரும் விளங்கிக் கொள்ளும்படி விளக்க முயல்வார் தந்தையார். சில சமயம் தாயா

(13-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது!

லதா கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது:

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எகிப்திய நாகரிகத்தின் மாண்பு

## கற்பனையைக் கிறுங்கவைக்கும் காவியங்கள் காலத்தை வென்று நிற்கும் ஓவியங்கள்

## மனிதகுலப் பொக்கிஷத்திற்கு ஆபத்து

### ஐ. நா. சபையின் அவசர அபயக்குரல்

புதைபொருள் ஆராய்ச்சி ஒரு நாட்டின் பழமையையும் மாண்பையும் விளக்க உதவுவதுடன், அந்நாட்டின் எல்லைகளுக்கு மப்பாற்பட்ட சரித்திரம் என்ற தொடர் கதையின் அத்தியாயங்கள் பலவற்றையும் அறிவைத் தேடும் மனிதனுக்குக் காட்டி உதவுகிறது. பாகிஸ்தானில், சிந்து நதிப் பள்ளத்தாக்கில் மொஹஞ்சோதாரோ, ஹெரப்பா ஆகிய இடங்களில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாகரிகம் ஒன்று உச்ச நிலையில் இருந்ததாகவும் அது தமிழரின் நாகரிகத்தை ஒத்திருப்பதாகவும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். எகிப்திலுள்ள நைல் நதிப் பள்ளத்தாக்கில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எகிப்திய நாகரிகத்தின் சின்னங்களைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த மிகப் பெரிய நாகரிகத்தின் பெரும் பகுதி இன்னும் புதைந்து கிடக்கிறது, நூபியா என்ற பிரதேசத்தில்.

இங்கே நைல் நதிக்குக் குறுக்கே அஸ்வான் என்னுமிடத்தில் அணை கட்டி நீரைத் தேக்கி, நீர்ப்பாசனம் புரிய எகிப்து அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. எகிப்திய நாகரிகச் செல்வத்தின் சின்னங்கள் அஸ்வான் நீர்த்தேக்கத்திற்குள் மறைந்து அழிந்துவிடுமுன், ஐக்கிய நாடுகள் சபை விஞ்ஞான, கல்வி, கலாச்சார ஸ்தாபனத்தின் மூலம் இந்தப் பொக்கிஷங்களை மனித குலத்திற்குக் காப்பாற்றி வைக்க ஓர் அகில உலக வேண்டுகோள் விடுத்திருக்கிறது, நிதி உதவி கோரி. மனிதகுலத்தின் அறிவாக்கத்தில் புதைபொருள் ஆராய்ச்சியின் பங்கு எத்துணை என்பது பின்வரும் மொழிபெயர்ப்புக் கட்டுரை மூலம் புலனாகும். மூலக் கட்டுரையின் பெயர் "S. O. S. From the Temples of Nubia"

அஸ்வான் அணைக்கட்டினால் புதை பொருட் பொக்கிஷங்களுக்கு ஏற்படப்போகும் அழிவைப்போல் இதற்குமுன் உலக சரித்திரத்தில் எங்கும் நிகழ்ந்ததில்லை. 1960 ஜனவரியில் கட்ட ஆரம்பித்த இந்த அணைக்கட்டு, எகிப்தியரின் விவசாய உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரிக்கும். ஆனால் அஸ்வானில் ஏற்படப்போகும் நீர்த்தேக்கத்திற்குள் 3000 வருடச் சரித்திரமல்லவா அழிந்து விடப்போகிறது!

#### மனிதகுலத்துக்கே சவால்

இங்கே ஆயிரமாயிரக் கணக்கில் மனிதனின் ஆக்க சக்தியின் விலை மதிக்க முடியாத சின்னங்களைக் காணலாம். அவற்றுள் முக்கியமானவை பேரோ மன்னர்களின் பன்னிரண்டு கல்லறைகளாகும். இணையற்ற அழகோடு பிரமிப்பில் கதி கலக்கும் மனித படைப்பின் பொக்கிஷங்களும் ஏராளம் ஏராளமாயிருக்கின்றன. 3000 வருடங்கள் மறைந்தோடியும் கோயிற் சுவர்களில் இன்றும் வண்ணம் மங்காத உயிரோவியங்கள் இங்கே கண் சிமிட்டிக் கதை சொல்லி நிற்கின்றன. இந்த 3000 வருடப் பொக்கிஷங்களுக்கு இன்னுமிருக்கும் சீவிய காலம் ஓராயிரம் நா-ட்-க-ள்!—உலக நிதி உதவிக் கோரிக்கை ஏதும் பயனளிக்காது போகுமானால்.

#### ஐ. நா. வின் கரிசனை

தனது உப அங்கங்களில் ஒன்றான கல்வி, கலாச்சார, விஞ்ஞான ஸ்தாபனம் மூலம் ஐக்கிய நாடுகள் சபை நிதி உதவி கோரி ஓர் அகில உலக வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மனித குலம் அனைத்திற்குமே உரித்தான இந்த மாண்பு மிகு பொக்கிஷங்களைக் காப்பாற்றும்படி விடப்பட்ட இவ் வேண்டுகோள் மனிதகுலம் அனைத்தினதும் மனச் சாட்சிக்கே விடப்பட்ட சவால். குறைந்த பட்சம் 40 கோடி ரூபாய் உடனே தேவை.

இந்த இணையற்ற பணிக்கு உதவும்படி ஐ. நா. கல்வி கலாச்சார ஸ்தாபனத் தலைவர் வெரோனீஸ் (Dr. Vittorino Veronese) அரசாங்கங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்ட குபேரர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

#### புகழ்பாடும் பொக்கிஷங்கள்

மேற்படி பணியை நிறைவேற்ற ஐக்கிய அரபுக் குடியரசிடம் போதிய நிதி வசதியோ, நுண் கலைஞர் சேவையோ கிடையாது. ஆனால் இன்னொரு வகையில் உதவ முன்வந்திருக்கிறது அரசாங்கம். எகிப்திய புதைபொருட் செல்வங்களை நாட்டிற்கு வெளியே எவரும் கொண்டுசெல்ல முடியாது. இந்தத் தடையை அகற்றி, புதை பொருட்கள் நீருக்குள் மறைந்துவிடுவதிலும் பார்க்க உலகத்தில் எந்த ஒரு மூலையிலிருந்துதானும் அவை எகிப்து நாட்டின் புகழைப் பாடிக்கொண்டிருக்கட்டும் என அனுமதி கொடுக்கிறது அரசாங்கம். ஒரேயொரு நிபந்தனையுண்டு. தனிப்பட்ட ஒருவரின் சொத்தாக இல்லாது பொது மக்கள் காட்சிக்கு என்றும் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் இவை. எகிப்திய அரசாங்கத்தின் இந்த உதவி, மனித சரித்திரத்தில் மிகப் பெரிய ஒரு திரவியத்தேட்டத்திற்கு வழி திறந்திருக்கிறது.

#### மறைந்த கனவுகளா?

புது அணைக் கட்டினுல் அஸ்வானிலிருந்து நைல் நதியின் ஊற்றுத் திசையில் (வடக்கே) எகிப்தின் எல்லைக்குள் 180 மைல் நீளப் பள்ளத்தாக்கும் சுடான் எல்லைக்குள் 112 மைல், நீளப்பள்ளத்தாக்கும் மறையப் போகின்றன. இதுதான் நூபியா. இங்கே ரோட்டுகள், ரெயில் பாதைகளில்லை. தங்கிநிற்க இடமில்லை. மக்கள் வாழ்ந்து மடிந்து நாகரிகத்தை வளர்த்த இப்பிரதேசம் இன்று மனிதன் அணுக முடியாத வனாந்திரம்.

மாரிகாலத்தில் நீரில் மறைந்த இவ் வாலயங்களுக்கு மேலாக நாம் படகில் போகலாம். கோடைகாலத்தில் நீர் வற்றியிருக்கும் கோவில்களைக் காணலாம். ஆனால் அஸ்வான் அணை இன்னும் 200 அடி உயர்ந்ததும் இனிவையெல்லாம் மறைந்த கனவுகளாகிவிடும்.

#### உலக நிபுணர்கள் உதவி

இங்கேதான் உலக விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் பணி செய்ய முன்வந்திருக்கிறது. இங்கிருக்கும் கோவில்களில் பல வெட்டிய சிறு சிறு கற்துண்டுகளாலானவை. வேறு பல, குகையோடு குகையாகக் குகைப் பாறைகளில் செதுக்கி நிர்மாணிக்கப்பட்டவை. இவற்றுள் எதை எதைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆலோசனை கூற உலக நிபுணர்கள் பலரின் சேவை கோரப்பட்டிருக்கிறது. வெட்டிய கற்களால் கட்டப்பட்ட கோவில்களைக் காப்பாற்றுவது சுலபம். இவற்றை ஒவ்வொரு கல்லாகக் கழற்றி விரும்பிய இடத்தில் மீண்டும் கொழுவிவிடலாம்.

#### நடமாடும் கோவில்கள்

கழற்றிக் கொழுவக்கூடியவற்றில் அமடாவின் ஆலயம் முக்கியமானது சுமார் 3400 வருடங்களுக்கு முன் யுத்தப் பிரியனன 3ம் துட்மோஸிஸ் என்ற மன்னனால் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில் 2ம் அமெனோபிஸ் என்ற இவன் மகன் காலத்தில்தான் முற்றுப்பெற்றது. இந்தக் கோவிலுக்குள்ளிருக்கும் அழகொழுகும் சிற்பங்கள் மனித கற்பனையைத் திகைக்க வைப்பன. சுவர்களில் தீட்டப்பட்ட சித்திரங்கள் இன்றும் இம்மியும் வண்ணம் மங்காது உயிர் வீசுகின்றன.

இக்கோவிலின் கற்கள் ஒவ்வொன்றிலும் இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விலக்கங்களுக்கமைய இவற்றைக் கழற்றிக் கொழுவுவதில் சிரமம் எதுவுமில்லை. இது ஒரு சிறிய கோவில். கழற்றிக் கொழுவும் வேலை அதிகம் செலவு பிடிக்காது சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாதான் தேவை.

#### குகைப்பாறைச் சிற்பங்கள்

ஆனால் குகைப்பாறைகளுடன் ஒன்றோடு ஒன்றாகத் தோண்டப்பட்டிருக்கும் கோவில்களைக் காப்பாற்றுவதில்தான் சிரமமிருக்கிறது. அறிஞர்களிடம் பதிலுமிருக்கிறது.

மின்சாரத்தின் உதவி கொண்டு இச்சுவர்களைத் துண்டு துண்டாகப் பாறைகளிலிருந்து வெட்டி எடுத்து மீண்டும் இத்துண்டுகளை ஒன்றின் மேலொன்றாக வரிசை முறையில் அடுக்கி, கோவிலை மீண்டும் ஒரு புது இடத்தில் கட்டி எழுப்பத் திட்டம் போட்டிருக்கிறார்கள் இக்கோவில்களில் இரண்டு எலேசியா, டேர் (Elleysia, Derr) என்பவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்ல ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது எகிப்து அரசாங்கம்.

#### "எகிப்தின் முத்து"

கவர்ச்சிக்கும் கம்பீரத்திற்கும் பெயர்பெற்ற இரண்டு கோவில்கள் பிலே (Philae) யும் அபு சிம்பெல் (Abu Simbel) உம் ஆகும். இவற்றை அகற்றுவது இமய மலையை நகர்த்துவதுபோன்றது. எனவே இவற்றைப் பாதுகாப்பதானால் இருக்குமிடத்திலேயே பாதுகாத்து வைக்க வேண்டியதுதான். பிலே ஆலயம் கிறிஸ்துவிற்கு 370 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. "மாபெரும் தெய்வீகத் தாய்" எனப்படும் "இஸிஸ்" (Isis) தெய்வத்தின் ஆலயமிது. இத் தெய்வத்தின் மதம் ஒரு காலத்தில் மத்தியதரைக் கடலோரம் அனைத்தும் பரவி வடக்கே பிரிட்டனிலும்வேரூன்றியிருந்தது. பிற் காலத்தில் கிறிஸ்தவ மதம் பரவுதற்குப் பெருந் தடையாயிருக்குமளவிற்கு வலி பெற்றிருந்தது இந்த மதம். 'எகிப்தின் முத்து" என்று வர்ணிக்கப்படும் இந்தச் க்ஷேத்திரத்திற்கு சாம்

(4ம் பக்கம் பார்க்க)

## கவிதைக்கும் சிறையோ?

—கா. சி. ஆனந்தன்—

காரிகையை மலர்க்காவை நிலவை விண்ணைக்
காட்டாற்று வெள்ளத்தைக் கவிதைபாடக்
'காரிகையைப்' படியென்று சொன்னா! அந்தக்
கவிதைக்கு வெறியுண்டோ? உணர்ச்சியுண்டோ?
பாரிகைக்கு விலங்கிட்டால் கொடையு முண்டோ?
பாவலர்க்கு வரம்பிட்டால் கவியு முண்டோ?
ஊர் நடக்க வாழ்ந்தாலும் யாப்புக் குள்ளே
உட்கார்ந்து கவியெழுத முடியாதையா!

பண்டிதர்கள் வைதாலும் எனது பாட்டைப்
பத்துப்பேர் உணர்ச்சியொடு படித்தால் போதும்!
மூண்டம்போல் கவியெழுத மாட்டேன்! நானே
முப்பதுபேர் உரையெழுதும் நிலையும் வேண்டாம்!
துண்டாடி எதுகையொடு மோனை பார்த்துத்
தொடைபார்த்து அடிபார்த்துக் கவிதை யாத்துத்
திண்டாடு மூலகத்தில் கவிஞன் இல்லை!
சிறையுண்டு பாடுவது கவியு மன்றே!

கல்லுடைத்த ஆறேபோல் கவிதை பாயும்!
கடல் பொங்கும்-அதுபோலக் கவிதை பொங்கும்!
பல்லுடைத்த கை போன வேகங் கொண்டு
பாட்டெழுதும் உள்ளத்தின் வேகம் போகும்!
புல்லிடத்தும் கவியுண்டு! போர் வீரன் கை
வில்லிடத்தும் கவியுண்டு! சட்டங் கூறும்
சொல்லெடுத்துச் சீரென்றுந் தளைகளென்றும்
சோடிக்குங் கூட்டத்தில் கவியுமுண்டோ?

திக்காடி முக்காடி அங்குமிங்கும்
தேடிப்போய் அகராதி பார்த்து வந்து
உட்கார்ந்து கவியாத்த புலவரெல்லாம்
உருப்படியாய் என்செய்தார் என்று கேட்பின்
செத்துப் போய்ப் பிறந்ததொரு சேயைப் போலச்
செயலற்ற பிண்டத்துக் குருவந் தந்தார்!
உப்பில்லை! புளியில்லை! அழுகல் முட்டை!
உணர்வற்ற பாட்டின் பேர் கொள்ளிக் கட்டை!




நடிகைகள் தேவை

சமூக, சரித்திர நாடகங்களில் நடிப்பதற்கு, தமிழில் தெளிவாகவும் — உணர்ச்சியுடனும் பேசும் ஆற்றல் உள்ள "நடிகைகள்" விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் அவசியமில்லை. 21 வயதுக்குட்பட்டவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியுடன் விண்ணப்பிக்கவும் கூடிய விரைவில்.

விவரங்களுக்கு:—

து. சோமசுந்தரன்,
(செயலாளர்)
கலைவாணர் நாடக மன்றம்
676, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஜீ. சீ. ஈ. தமிழ் பரீட்சை
டிசம்பர் | ஆகஸ்ட்

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைவது மிக எளிதாகி விட்டது.

* பரீட்சையின் புதிய நிபந்தனைகள்
* எமது புதிய பாடங்கள்
* 101 வினு விடைகள்
* கடந்த கால வினு விடைகள்

போன்றவற்றிற்கு இன்றே எழுதுங்கள்.

விபரங்கள் இலவசம்

அற்லஸ் ஹோல் த. பெ. 649, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொங்கோவில் நடப்பது என்ன?

## 'டிஸ்மிஸ்' நாடகம்

## குழப்பத்துக்கான காரணங்களே ஒரே குழப்ப மயம்

## இருண்ட ஆபிரிக்காக் கண்டத்தை நாளும் பொழுதும் கவ்வுகிறது கருமேகம்

ஒரு நாடு.
ஒரு ஜனாதிபதி.
இரண்டு பிரதமர்கள்!
மூன்று மந்திரி சபைகள்!
நாலு இராணுவங்கள்!
ஆறு மாகாணங்கள்!
நூற்றுக்கு மேற்பட்ட இனங்கள்!
ஜனாதிபதி பிரதமரால் டிஸ்மிஸ்!
பிரதமர் ஜனாதிபதியால் டிஸ்மிஸ்!
ஒரு இராணுவத் தளபதி டிஸ்மிஸ்!
ஒரு பிரதமர் மற்றப் பிரதமரை டிஸ்மிஸ்!
புதிய இராணுவத் தளபதி நியமனம்!
மீண்டும் பதவியில் முதல் பிரதமர்!
மீண்டும் பதவியில் இரண்டாம் பிரதமர்!
பிரதமர்களும் ஜனாதிபதியும் டிஸ்மிஸ்!
பரவி வரும் அம்மை நோய்!
ஒரே குழப்பம்.

இதுதான் இன்றைய கொங்கோ!!
சிதம்பர சக்கரம்.

**செ. குமாரசாமி**

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜூன் 30-ல் கொங்கோவில் காலனி ஆட்சி முடிவுற்றது. பல நூற்றாண்டு காலமாக கொங்கோவை நசுக்கி வந்த பெல்ஜியம், அதிகாரத்தை கொங்கோ தலைவர்களிடம் ஒப்படைத்தது என்றோ ஒரு நாள் கொங்கோ மக்களடம் ஆட்சிப் பொறுப்புப் போக வேண்டியதே என்று பெல்ஜியம் நினைத்ததில்லை. அதற்கேற்ப நடந்ததில்லை. தங்கம், வெள்ளி வைரம் போன்ற கனி வளம் செறிந்த இந்த பென்னம் பெரிய நாட்டில் பெல்ஜியரின் அடக்குமுறையும் அதிகாரத் திமிரும் தென்னாபிரிக்க காட்டுமிராண்டித்தனத்தையும் மிஞ்சி நின்றது. பொருளாதாரம் முழுவதும் இரண்டே இரண்டு பெல்ஜிய கம்பனிகள் கையிலிருந்தது. காங்கோவை ஒரு நாடு என்று இவர்கள் நினைத்ததில்லை. பெரிய ஒரு வியாபார ஸ்தாபனமாகவே அதைக் கருதினார்கள்.

### தூபமிட்டு மோதவிட்டனர்

பூர்வீகக்குடிகளாக வேடர்களைப்போன்ற நிலையிலுள்ள இம்மக்கள் எத்தனை எத்தனையோ சாதியினர் (Tribes). அத்தனை வர்ணங்களையும் பிரித்து வைத்து, வித்தியாசங்களை வளர்த்து, வேற்றுமைகளுக்குத் தூபமிட்டு, ஒரு ஜாதியுடன் இன்னொரு ஜாதியை மோதவிட்டு, குழப்ப நிலையை நீடித்து, தன்னரசு ஓச்சி வந்தது பெல்ஜியம் "கல்வி வாசனையின்றேல் தொல்லை வாசனையேயிராது" என்பது பெல்ஜிய ஏகாதிபத்தியத்தின் கலோகம் நாட்டை வளம் படுத்த என்ஜினியர்கள், தொழில் நுட்பதாரிகள், ஆசிரியர்கள் ஆகியோரை உற்பத்தி செய்ய விரும்பவில்லை. அந்தப் பிரமாண்டமான நாட்டிலே பல்கலைக் கழகப் பட்டதாரிகளின் தொகை மூன்று! அவர்களுள் ஒருவர் சமயத்துறையில் பட்டம்பெற்ற சாமியார்!

### ஏகாதிபத்தியம் பணிந்தது

இருந்தும் பெல்ஜியத்தின் சூழ்ச்சிகளையும் மீறி, அந்த நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான ஜாதிகளும் ஒன்று சேர்ந்து, கொங்கோலிய தேசியம் உயிர் பெற்றது. சரித்திரத்தின் நியதியைச் சுண்டங்காய் பெல்ஜியத்தினால் தடுத்து வைக்க முடியவில்லை. உலக அபிப்பிராயத்தின் முன் பெல்ஜியம் கேவலமான மதிப்பிற்காளாயிற்று. பொங்கி வரும் பேரலைகளுக்குப் பயந்து, ஏனோதானோ என்ற பாவனையில் கொங்கோலியர்களை மக்கள் என்று ஒருகணம் நினைத்தது பெல்ஜியம். கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளிற் சிறிது கவனம் காட்டப்பட்டது. ஆனால் களஞ்சிய அறைக்கு வெளியே நின்று "இதைத் தா அதைத் தா" என்று கேட்பதுடன திருப்தியடையும் நிலையைக் கொங்கோலியர் கடந்துவிட்டார்கள். அறைத் திறப்பை அப்படியே தந்துவிட்டு வெளியேறிவிடு என்றார்கள் பெல்ஜியத்திடம். ஜனவரி 1959ல் தலைநகரான லியப்போல்ட்வில்லில் மாபெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. பணிந்தது ஏகாதிபத்தியம். சுதந்திரம் கொடுப்பதை ஏற்றுக் கொண்டார்கள்—கொள்கையளவில் மாத்திரம்!


### கொள்கைகளில் வேறுபாடு

கலகம் ஓய்ந்தபாடில்லை. அவசரம் அவசரமாக பெப்ரவரி மாதம் பிரஸல்ஸ் (Brussels—பெல்ஜிய தலைநகரி)ல் மகாநாடு ஒன்றிற்கு ஏற்பாடாயிற்று. பெல்ஜிய ஏகாதிபத்தியத்தினால் கலகங்களைத் தூண்டியதாகச் சிறையில் தள்ளப்பட்ட லூமும்பாவைச் சிறையிலிருந்து நேரே விமானத்துறைக்கு கொண்டுபோய் மகாநாட்டிற்குப் பயணமனுப்பினார்கள் இவர் கொங்கோலிய தேசிய இயக்கம் (M. N. C.) என்ற கட்சியின் தலைவர். கொங்கோ முழுவதும் பலமான ஒரு மத்திய ஆட்சியிருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர். இவருடன் மகாநாட்டில் பங்குபற்றிய வேறிருவரும் முக்கியமானவர்கள். கொங்கோவிலுள்ள 6 மாகாணங்களில் ஒன்றான கடாங்கா மாகாணத்தில் பெரும் செல்வாக்குக் கொண்டவரான ஷோம்பே ஒருவர் மற்றவர் இன்று ஜனாதிபதியாயும் ஜனாதிபதியாயில்லாமலுமிருக்கும் கஸவுபு என்பர். ஷோம்பேயும் கஸவுபும் கேந்திர ஒற்றை யாட்சியில் நம்பிக்கையற்றவர்கள். பூமத்திய கொங்கோ, கிழக்குக் கொங்கோ, லியெப்போல்ட்வில், கஸாய், கிவு, கடங்கா ஆகிய 6 மாகாணங்களிலும் மாகாண அரசுகள் ஏற்படுத்திக் கொங்கோவில் இணைப்பரசு நிறுவப்பட வேண்டுமென்ற கொள்கையுடையவர்கள்.

### ஆதிக்க வெறியரின் நப்பாசை

மாறுபட்ட கொள்கையுடைய இக்கொங்கோலிய பிரதிநிதிகளிடையே மகாநாட்டில் ஆப்புச் செருகப் பார்த்தது ஏகாதிபத்தியம்.

ஆனால் இம்மூவருக்குமிடையே 16 அம்சத் திட்டமொன்றில் ஒற்றுமை ஏற்பட்டது. ஏகாதிபத்தியம்




ஒன்று தொடக்கம் ஒன்பது வரை இலக்கமிடப்பட்டுள்ளவை அந்தந்த மகாணங்களிலுள்ள முக்கிய நகரங்கள். 1. லியப்போல்டவில், 2 பிறேஸவில் 3. எலிஸபெத்வில் 4. ஸ்ரான்லிவில், 5 லுலுபோர்க். 6. மாற்ரடி, 7. போமோ, 8. கொக்கிலாத்வில், 9. இலெபோ துறைமுகம்.

மலைத்தது. வேறு வழியின்றி பெல்ஜியம் சாதுரியமாக சுதந்திரமளிக்கும் ஒப்பந்தமொன்றிற்கு இசைந்தது. ஆயிரக்கணக்கான ஜாதிகள், ஜாதிகளிடையே பரஸ்பர பணக்குகள், தலைவர்களிடையே வேற்றுமைகள், அரசாங்க இயந்திரத்தைக் கொண்டு நடத்தப் படித்த கொங்கோலியரின்மை, பரந்த நிலப்பரப்பு, போக்குவரத்து தந்தி தபால் சேவை சீர்கேடு, ஒன்றுபட்ட இராணுவமின்மை—இவைகளைத்தையும் நம்பி பெல்ஜியம் சாதுரியமாகச் சுதந்தரத்திற்கு ஒருப்பட்டது. இந்தச் சீருகுலைந்த நிலைமையில் பெல்ஜியத்தையும் பெல்ஜிய உதவியையும் கொங்கோ நாடியே தீரும்; தொடர்ந்து தனது ஆதிக்கத்தை மறைமுகமாக நீடிக்கவே முடியும் என்று பெல் [illegible] ஸல்ஸ் மகாநாடு வெற்றி யளித்தது. ஜூன் 30ல் கொங்கோ சுதந்திரமடைந்தது.

### ஒப்பந்த ஷரத்துக்கள்

ஒப்பந்தத்தின் பிரகாரம் பெல்ஜிய இராணுவம் நாட்டின் மேற்கிலுள்ள கிற்ரோனா பட்டினத்திலும் கிழக்கில் கடாங்கா மாகாணத்திலுள்ள காமினா பட்டினத்திலுமாக இரண்டு முகாம்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது.

சீர்குலைந்து, சிறப்பழிந்து நிற்கும் இந்த நாட்டின் பரிதாப நிலையை உணர்வதானால் ஒப்பந்தத்திலுள்ள அரசியல் ஷரத்துகளைச் சுருக்கமாகக் கூற வேண்டியது அவசியம்.

சுதந்திர தினத்தின் முன் பிரதிநிதிகள் சபையும் மேற்சபையும் ஒன்றாகக் கூடி அரசியல் நிர்ணய சபையாக இயங்கி அரசியல் திட்டத்தை வகுக்க வேண்டும். 6 மாகாணங்களுக்குமுரிய பிரதிநிதிகள் சபைகளுக்கும் மத்திய பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும். மாகாண சபைகளின் பிரதிநிதிகள், தலைநகரான லியோப்போல்ட்வில்லிலுள்ள மத்திய மேற்சபைக்கு 14 அங்கத்தவர்களை நியமனம் செய்வார்கள். பாராளுமன்றம் கூடியதும் பெல்ஜியத்துடன் செய்த இராணுவத் தளங்கள்பற்றிய ஒப்பந்தம் அங்கிகாரம் பெற வேண்டும்.

ஆனால் இவற்றில் எதுவும் நடக்கவில்லை. நடைபெற முடியவில்லை!

குழந்தை பிறக்கும் மகிழ்ச்சியில் குதூகலித்திருந்த மக்களின் நம்பிக்கை சிதைந்தது!

### தேர்தல் முடிவுகள்

சுதந்திர தினமாகிய ஜூன் 30க்கு முன் தேர்தல்கள் நடைபெற்றன, மே 11ல். இந்த நாட்டின் சரித்திரத்தில் முதன்முறையாக நடந்த தேர்தலிது. இந்தப் புதுமையில் பங்குபற்றிய கட்சிகளின் தொகை நூற்றுக்கு மேற்பட்டது! பல்வேறுவிதமான குலைப்புகளும் கூட்டுகளுமான 14 சட்டசபை பிரதிநிதிகள் சபையில்

(12-ம் பக்கம் பார்க்க)

## 8000 ஆண்டுகளுக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜ்ய அதிபதிகள் யாத்திரீகர்கள் ஆகியோர் தரிசனத்திற்கு வருவதுண்டு. வந்தவர்கள் தத்தம் பெயர்களைச் சுவர்களில் பொறித்திருக்கிறார்கள். இன்று இந்தக் குறிப்புகள் சரித்திர ஆராய்ச்சியாளருக்குப் பெரும் உதவியாயிருக்கின்றன. பிலேயைச் சுற்றி நீர் அணுகாமல் ஒரு அணையைக் கட்டி வருடம் முழுவதும் பிரயாணிகள் தரிசிக்கத்தக்கதாகச் செய்யலாமென என்ஜினியர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இதில் ஏற்படும் செலவு சுமார் 1 கோடியே 30 லட்சம் ஆகும். இருந்தும் இந்தச் செலவினால் பலனுண்டு. அந்தக் காலத்தில் கடல் கடந்து யாத்திரீகர்கள் வந்தது போல அஸ்வான் அணைக்கட்டு உலக யாத்திரீகர்களைக் கவர்ந்து அழைக்க இன்றும் பிலே கோவில் மையமாய் அமைந்து விடுமன்றோ!

### அபு-சிம்பெல்——ஒரு காவியம்!

பிலே கோவிலைப்போல சுலபமானதல்ல அபு சிம்பெல் என்ற கோவில். அபு சிம்பெல் நீரில் மறையுமானால் இதைவிட நெஞ்சைப் பிழியும் சம்பவம் வேறிருக்க முடியாது. இதைக் காப்பாற்றும் செலவும்பிரமாண்டமானது எகிப்திய புதைந்த நாகரிகத்தில் மாத்திரமல்ல, உலகைத்திலுமே வேறொரு அபு சிம்பெலைக் காண முடியாது. இவ்வற்புதத்தின் காலம் என்ன? கிறிஸ்துவிற்கு 1265 வருடங்களுக்கு முந்திய காவியம் அபு சிம்பெல்.

இந்த மாபெரும் காப்பியம் ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றாக மதிக்கப்படாமற்போனதின் காரணம் புரியக்கூடியதாயில்லை.

இதைக் கட்டியெழுப்பிய மன்னன் 2ம் ராமிஸெஸ் என்பவன் எகிப்திய பேரோ மன்னர்களில் மிகப் புகழ்பெற்றவன். நைல் நதியின் முகத்துவாரத்திலிருந்து வடக்கே 900 மைலில் நதியோரமாக இருக்கிறது இந்தக் கோவிற்கூடம். இக்கூட்டத்திலொன்றை "அழகுத் துணைவி" என்ற பொருள் கொண்ட தன் மனைவியின் ஞாபகச் சின்னமாகக் கட்டியெழுப்பினான் மன்னன். கட்டி முடிய வருடம் 15 பிடித்தது.


### கற்பனை கிறுங்குகிறதே!

இந்த மலைச் சிகரக் கோவிலுக்கு அணிமையில் இன்னுமொரு கோவிலுண்டு. 108 அடிவரைக்கும் மலைக்குன்றின் கரடுமுரடு அகற்றப்பட்டிருக்கிறது. அதற்குமேலே ஒவ்வொன்றும் 67 அடி உயரமான 4 இராக்ஷஸ உருவங்கள் (Colossi) ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் நிலையில் இருக்கின்றன. இவை நாலும் ராமிஸெஸ் மன்னனுடைய சிலைகள். இங்கிருந்து கீழே மலையைக் குடைந்து தோண்டி எடுத்து ஒன்றன்பின் ஒன்றாக எண்ணிறந்த பிரமாண்டமான மண்டபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மண்டபங்களின் சுவர்களில் செதுக்கப்பட்டிருக்கும் படைப்புகளை வர்ணித்து முடியாது! மண்டப வாசல்களில வரிசை வரிசையாகச் சிறிய சிலைகள்—ஒவ்வொன்றும் 30 அடி உயரம்—காவல் புரிகின்றன.

எந்த நேரத்தில் பார்த்தாலும் அபு சிம்பெல மனிதக் கற்பனையையே கிறுங்க வைக்கும்! அதிலும் வைகறைப் பொழுதிலோ அதன்......... அம்மம்ம!!!

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாளும் பொழுதும் நங்கையின் நாட்டமெல்லாம்
நாஷனலில்....
National
DB-331
NATIONAL
நாஷனல்
★ நவீன மோஸ்தருடன் கூடிய அழகிய மரப்பெட்டி.
★ டிரான்ஸிஸ்டர்கள்.
★ அகில உலக கிரகிப்பு 3 வேவ் பாண்டுகள்.
★ இரு ஹை பை ஒலிபெருக்கிகள்
★ சிறந்த சுருதிக் கட்டுப்பாடு
★ மத்திய, சிற்றலைகட்கு பிரத்தியேக உட்புற ஏரியல்
ஒரு வருட உத்தரவாதம்.
அசல் விலை ரூ. 360-00
ஏக விநியோகஸ்தர்கள்:-
எலைட் ரேடியோ & என்ஜினியரிங் கம்பெனி,

பாராளுமன்றத் துணுக்குகள் * * *

# காங்கேசன்துறை துறைமுகம்

கனம் ஸி. பி. டி சில்வா:...... உத்தரவாத விலைத் திட்டம் பற்றி நான் கூற விரும்பியது இவ்வளவுமே.

சா. ஜே. வே. செல்வநாயகம்: வெங்காயத்தின் உத்தரவாத விலைபற்றி மந்திரியவர்கள் சிறிது கூற முடியுமா?

ஸி. பி. டி. சில்வா: ஏற்கனவேயுள்ள ஒழுங்குகள் தொடர்ந்து நீடிக்கும். தூத்துக்குடியிலிருப்பது போல் சில களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கிறோம். வெங்காயத்தை சுமார் 6 மாத காலத்திற்குச் சேமித்து வைக்கத் தூத்துக்குடியில் கையாளப்படும் முறை மிகவும் செலவுச் சுருக்கமானது. வெங்காயத்தைச் சேமித்து வைப்பதில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு உதவி ஏதும் செய்ய முடியுமென்றே நம்புகிறோம்.

சா. ஜே. வே. செல்வநாயகம்; எப்பொழுதாவது வெங்காயம் இறக்குமதி செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

ஸி. பி. டி. சில்வா: குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டால் தட்டுப்பாட்டை மேவுவதற்காக நாங்கள் வெங்காயம் இறக்குமதி செய்வோம். ஆனல் யாழ்ப்பாணத்தில் வெங்காய உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய வழியில் இப்படிச் செய்யமாட்டோம்.

## 'அவைப் புரு'

ஃ

டாக்டர் நாகநாதன்:...நாங்கள் இறக்குமதி செய்யும் வெங்காயம்பற்றிக் குறிப்பிடுகிறேன். இந்த வெங்காயத்திற்கு நாம் அதிக விலை கொடுக்கிறோம். யாழ்ப்பாண வெங்காயம் விலைமலிவானது. யார் பணத்தைச் சுவடுகிறார்களோ எனக்குத் தெரியாது; தரகர்களா? அரசாங்கமா? அல்லது........ எதுவானலும் இது நாட்டிற்குப்பெரிய நட்டம்.

திரு தஹநாயக்கா: காலித் துறைமுகம்பற்றி தீர்வை அதிகாரி கூறியுள்ளதை வாசிக்கிறேன். "களவு போதல் என்பதைக் கண்டதேயில்லை..........."

டாக்டர் நாகநாதன்: ஓ! கெட்டித்தனமாகக் களவெடுக்கிறார்கள்போலும்!

திரு தஹநாயக்கா: வடக்கேயுள்ளவர்களை (யாழ்ப்பாணத்தவர்களை)க் கொண்டு காலி மக்களை மதிப்பிடுகிறாரோ இவர், தெரியவில்லை. வடக்கில் கள்ளக்கடத்தல் மாறு நியதிபோல் நடக்கிறதே! காலி மக்களும் தெற்கில் உருகுணரட்டையிலுள்ளவர்களும் வடக்கிலுள்ள கள்ளக்கடத்தல்காரர்களைப் போல் அவ்வளவு தேசாபிமானமற்ற சமுதாய விரோதிகளல்ல.

ஃ

திரு தஹநாயக்கா: காலித் துறைமுகத்திற்கு உணவுக் கப்பல்கள் ஒழுங்காக அனுப்பப்பட வேண்டும். உணவு விநியோகத்தில் நாம் ஒரேயொரு துறைமுகத்தைமாத்திரம் நம்பியிருக்கக்கூடாது. தீவு அனைத்தையும் சுற்றிவர, ஏராளமான துறைமுகங்கள் உணவுப்பொருள் விநியோகத்திற்குத் திறக்கப்பட வேண்டும். அத்துடன் இத்துறைமுகங்கள் ஆடிக்கு ஒருமுறை ஆவணிக்கொரு முறையாகப் பாவிக்கப்படாது. வருடம் முழுவதும் உபயோகத்திலிருக்க வேண்டும். காலியுடன் திருகோணமலையும் வடக்கே இன்னுமொரு துறைமுகமும் இத்தேவைக்கு உடனே திறக்கப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

டாக்டர் நாகநாதன்: சபாஷ்! சபாஷ்!

திரு தஹநாயக்கா: மனநிலைக்கேற்றபடியில்லாது ஒழுங்காக வருடம் முழுவதும் இத்துறைகளில் இறக்குமதி நடைபெற வேண்டும்.

அலுவலகத்திலிருந்து கொண்டு தான்தோன்றித்தனமாகப் போடப்படும் அரசாங்க ஊழியர் ஒருவரின் உத்தரவின்பேரில்தான் இன்று காலிக்கோ, காங்கேசன்துறைக்கோ உணவுக் கப்பல்கள் போகின்றன. இப்படியில்லாது, வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரலின்படி இது நிகழ வேண்டியது அவசியம். அதாவது காலியிலும் திருகோணமலையிலும் வடக்கில் ஒரு பட்டினத்திலும் உணவுப் பொருட் துறைமுகங்கள் அவசரம். இந்த ஒவ்வொரு துறைமுகமும் எந்தெந்த எல்லைவரை உணவுப்பொருட்களை விநியோகஞ் செய்யலாம் என்ற அடிப்படையில் இலங்கை மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். இத்தனை வருட கால அனுபவத்தில் இப்படிப் பிரதேசவாரியாகப் பிரிப்பதில் உணவுக் கந்தோருக்குக் கஷ்டமிருக்க முடியாது. இந்த வழியினல் மாத்திரமே உணவுப் பொருட்களைத் துரிதமாக நாடு முழுவதும் விநியோகஞ் செய்ய முடியும். அத்துடன் இந்த ஒரு வழியே அவசர காலங்களிலும் திறம்பட இயங்கவும் முடியும். செலவுச் சுருக்கத்திற்கும் இந்த ஒரு வழியே சிறந்தது. நல்லூரில் சமைக்கப்படும் அரிசி கொழும்பில் ஏன் இறக்கப்பட வேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை.

டாக்டர் நாகநாதன்: வெட்கப்பட வேண்டிய விஷயம்.

திரு தஹநாயக்கா: நல்லூரிலுள்ள உலைகளுக்குள் போகும் அரிசி காங்கேசன் துறையில் அல்லது வேருெரு யாழ்ப்பாணத் துறைமுகத்தில் இறக்கப்பட வேண்டும். மூதூரில் பாவனையாளருக்குக் கிடைக்கும் அரிசி திருகோணமலையில் இறக்கப்பட வேண்டும். உதாரணமாக

(14-ம் பக்கம் பார்க்க).






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இது என் நாடு இதற்கு எந்த நாடு ஈடு என்று கேட்பது குறுகிய நோக்காகுமா?

## உலகமே என் தாயகம் என்று உன் நாட்டை அழியவிடுவது உயர்ந்த பண்பா?

### சிறுகதை மன்னன் ஓ. ஹென்றியின் சிந்தனை விருந்து

(சி. என். அண்ணாத்துரை எம். எல். ஏ.)

'தேசியம்' என்பதுகூட, ஒரு போலித் தத்துவந்தான்! மனிதகுலம் ஒன்றேயன்றி, அதிலே, மஞ்சள், கருப்பு, வெள்ளை, மாநிறம் என்றெல்லாம் குறிப்பிட்டு இது என்நாடு, இது என் அரசு, என்றுவாதாடுவது பேதமை, என்று கூடப் பெரியவர்கள் பேசுகிறார்கள்—சுவை இருக்கிறது பேச்சில்; மறுத்தால், குடு கூடப் பிறந்துவிடுகிறது; ஆனால் செயல் முறை, எங்ஙனம் இருக்கிறது என்று கவனிக்கும்போதுதான், அந்தப் பெரியவர்கள் பேசுவது, மற்றவர்கள் கேட்டுத் தம்முடைய உரிமையை இழந்திடத் தூண்டவேயொழிய, தமது உரிமையை விட்டுக் கொடுக்க அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

ஓ. ஹென்ரி சுவைமிகு சிறுகதைகள் பல எழுதிப் புகழ் ஈட்டிய, அமெரிக்க எழுத்தாளர். கதைகளில் சுவை என்றால், சொல்லடுக்கால் கட்டுக்கோப்பு முறையால் கிடைத்திடும் சுவைமட்டுமல்ல, கதையிலே இடம் பெற்று, படிப்போரின் நெஞ்சைத் தொட்டிடும் கருத்தால் கிடைத்திடும் தரும் சுவை.

#### விந்தை மனிதன்

ஒரு உணவு விடுதி! மிகப் பெரியது, புகழ் வாய்ந்தது. எப்போதும் இங்கு ஒரே ஆரவாரம், கூட்டம், குதூகலம். எங்கிருந்தெல்லாமோ, வருகிறார்கள் இந்த உணவு விடுதிக்கு.

கூட்டத்திலே சேராமல், ஆனால் அனைவரையும் கூர்ந்து கவனித்தபடி, ஒருவன், இருக்கிறான்—அவன் ஒரு சிந்தனையாளன். அரசியல், பொருளியல், மன இயல், இவைகளைப்பற்றி எல்லாம் நிரம்பத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு. இந்த விடுதியிலே பலர் வருகிறார்கள், பலவிஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்காகவே வந்திருக்கிறான்.

விந்தையான மனிதர்கள், வேடிக்கையான இடம்! என்று எண்ணியபடி அவன் உட்கார்ந்திருக்கிறான். நடமாடும் விந்தை தன்னை என்று சொல்லத்தக்கவிதத்தில், ஒருவன், உள்ளே நுழைந்து, ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, உட்கார இடம்தேடி, ஒதுக்குப் புறமான இடத்தில், தனியாக உட்கார்ந்திருக்கும் சிந்தனையாளனைப் பார்க்கிறான். என்ன எண்ணிக் கொண்டானோ, தெரியவில்லை, நேராக, அதே இடம் வந்து, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறான்.

#### சிந்தனையாளன் சந்திப்பு

மயக்கும் பார்வை! இனிக்கும் பேச்சு! அந்த விந்தை மனிதனுக்கு.

"தாங்கள் எந்த ஊரோ?" என்று கேட்டான், சிந்தனையாளன்.

"நானா? நான், நாரீவே! அல்லது பலன்தீன்! பாரிஸ்!" என்று ஏதாவது பதில் சொல்லுவான் என்பது, சிந்தனையாளன் நினைப்பு. விந்தை மனிதனோ, உடனே பதில் கூறவில்லை, ஏற இறங்கப்பார்த்து விட்டு, ஏளனம் பச்சாதாபம், வியப்பு, எல்லாம் கலந்த ஒரு புன்னகையைக் காட்டியபடி, "நானா? எந்த ஊர் என்று கேட்கிறாய்! நான், நான் என்ன சொல்ல என் ஊர், உலகம்!! இப்போது பீகிங் நகரிலிருந்து புறப்பட்டு வருகிறேன்; டமாஸ்கஸ் நகர வியாபாரி ஒருவருக்குக் காஷ்மீர் கம்பளம் தேவை என்று வெனிஸ் நண்பன் கூறக்கேட்டு, இன்றிரவு பக்தாத் கிளம்புகிறேன் என்று பதிலளித்தான்.

ஊர் எது என்று கேட்ட உடன், மளமளவென்று உலகையே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறானே, என்று, ஆச்சரியம் சிந்தனையாளனுக்கு.

"உலகம், எல்லோருக்கும் பொதுவானது. என்றாலும், அவரவர்களுக்கு என்று ஒரு நாடு, ஓர் ஊர், உண்டு அல்லவா?" என்று கேட்டான் சிந்தனையாளன்.

#### மதிப்பு குறைவு

"இளைஞனே! பொதுவாகப் பலருக்கும் இருக்கும் பித்தம் உனக்கும் இருக்கிறது என் நாடு, என் ஊர் என்பது, அர்த்தமற்ற பேச்சு!! நாட்டின்மீது பற்று வைப்பது என்ற தத்துவமே, போலி—சொத்தை. மண்ணும் விண்ணும், மரமும் மலரும், குதலைமொழிக் குழந்தையரும், குழல்மொழிக் குமரிகளும், எல்லா இடத்திலும், உலகமெங்கும் உண்டு! இதிலே, ஒரு குறிப்பிட்ட எல்லையை நாமாக வகுத்துக்கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு, என்று பேசுவது, பேதமை. ஒரு குறிப்பிட்ட இடத்தின்மீது பற்று இருப்பதாகப் பேசுவதும் பொறுத்தமற்றது. எனக்கு இமயமலை பனிமுடி இருக்கும் காட்சியும், இலண்டன் மாநகரம் மூடுபனியில் மூழ்கிக் கிடப்பதும், நைல் நதியின் நேர்த்தியும், நேப்பிளஸ் நகர வசீகரமும், பெர்லின் நகரத் தொழிற்சாலையும், பிரான்சு நாட்டு மதுவகையும் மணிபுரி நடனமும் மாட்ரிட் நகர மாட்டுச் சண்டையும், எல்லாமே பிடிக்கும்; எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சி தான் எனக்கு—என் நாடு! அதிலே என் ஊர்! அதிலே என் தெரு! அதிலே நான் பிறந்த வீடு! நான் விளையாடிய மண்மேடு! அங்கு நான் கலைத்தெறிந்த குருவிக் கூடு!—என்றெல்லாம் பேசுவது கிடையாது.

#### உலகநாதன்

நான் மனிதன், இந்த நாட்டுக்காரன்—அந்த நாட்டுக்காரன் என்று, என்னையே நான் மதிப்புக் குறைவாக்கிக் கொள்ளமாட்டேன். என் நாடு உலகம்!! மசூதியும், மாதா கோயிலும், தேரும் திருவிழாவும், உண்டு! இதிலே இதுதான் என்னுடையது, இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது. நான் சில வேளைகளில், சில இடங்களில் தங்குவேன்—ஆனால் அதிலே இன்ன இடம், என் இடம் என்று கூறி, மற்ற இடங்களை இழந்துவிடுவேனா! மதியற்றவனல்லவா, அப்படிச் செய்வான். நான் அரபிய பாலைவனத்திலே ஒட்டகத்தின் மீது அமர்ந்து செல்வேன், கேரளத்திலே படகேறிச் செல்வேன்! [illegible] டாரியில் குதிரை! இலண்டனில் [illegible] வியானை! [illegible] வில், ரயில்!!—இப்படி! ஆனால், இதிலே இதுதான் என் நாடு மற்றவை மற்ற எவரெவருக்கோ, என்று பேசும், பஞ்சப்புத்திக்காரனல்ல நான்! எனக்கு, உலகம், உறைவிடம்! உலகநாதன் என்று என்னை அழைக்கலாம்."

#### சிறுபிள்ளைத்தனம்

சிந்தனையாளன், வியப்பிலே அமிழ்ந்தே போனான்.

நாடு, நாட்டுப்பற்று, நாட்டு விடுதலை, அதற்கான போர், அதிலே தியாகங்கள், வீரவரலாறுகள், இவைகளை எல்லாம் படித்துப் படித்து, நெஞ்சு நெக்குருகி இருக்கிறான்—இதோ ஒருவன், தன்னை உலகநாதன் என்று கூறிக்கொள்கிறான்—நாட்டுப்பற்று என்று பேசுவதே சிறுபிள்ளைத்தனம் என்று கேலி செய்கிறான்—இவனல்லவா, தலைசிறந்த தத்துவவாதி—நாட்டுப்பற்று எனும் பாசத்தைக்கூடக் கடந்தவன்!—என்று எண்ணி வியந்தான்.

"என் நாடு இங்கிலாந்து என்று கூறிவிட்டால், உனக்குக் கரித்துண்டு மட்டும் தான் சொந்தமாகும், ஆபிரிக்காவிலே உள்ள வைரம், உனக்கு இருக்காது—தமிழ் நாட்டு முத்து உனக்கல்ல, ஆப்கன் நாட்டு பழவகை உனக்கில்லை,........." என்று விந்தை மனிதன் கூறக்கேட்டு, சிந்தனையாளன், இவனே 'இலட்சிய புருஷன்'—இவன் கூறுவதே உண்மையான தத்துவம், தேசியம் என்பது கூடச் சொத்தை வாதம், நாமும் 'உலகநாதன்' ஆகிவிடவேண்டும் குறுகிய மனப்பான்மை கூடாது, எல்லைக் கோடுகளிலே சிக்கிக் கொள்ளலாகாது, என்றெல்லாம், தீர்மானித்தான்.

உலகநாதன், சிறிதுநேரம் இருந்துவிட்டு, விடைபெற்றுக்கொண்டு, கிளம்பினான்.

சிந்தனையாளன், செந்தேன் உண்டவன் போலாகி, அங்கேயே, உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, பெருங் கூச்சல் கேட்டது.

#### போலித் தத்துவம்

ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதும், தாறுமாறாகப் பேசிக்கொள்வதும், கேட்டது.

உதைப்பேன்! கொன்றுவிடுவேன்! கட்டுத் தள்ளுவேன்!—என்று கூக்குரல் கிளம்பிற்று.

பரபரப்பு ஏற்பட்டது; அமளி மூண்டுவிட்டது. மேஜைகள், நாற்காலிகள், பறந்தன, உடைந்தன. உண்டு களித்திருந்தோர், மூலைக்கு ஒருவராக ஓடலாயினர்.

பலப்பல நூற்றாண்டுகளாகப், பாவாணர்களும், அரசியல் ஆசிரியர்களும், எழுச்சியூட்டி நிலைநாட்டிய தேசியம்—நாட்டுப்பற்று—என் [illegible] என்ற பெருமையை, உலகநாதன் உன்னதமான விளக்கத்தால் பெற்று பெருமிதம் அடைந்திருக்கும் வேளையில், ஏதோ ஒரு அற்ப விஷயத்துக்காக, இங்கு அமளி செய்கிறார்களே, அறிவற்றவர்கள். பேருண்மையைக் கேட்டறியாப் பித்தர்கள், என்று எண்ணி வெறுப்படைந்தான், சிந்தனையாளன்.

இதற்குள், அமளிபலமாகிவிட்டது. ஒருவன் பலமாகத் தாக்கப்பட்டு; கீழே சாய்ந்தான். அவன் உடலில் பல இடங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"ஐயோ பாவம்! எவனையோ, பலமாகத் தாக்கி விட்டார்களே!" என்று முணுமுணுத்தபடி, அந்த இடம் நோக்கிச் சென்றான், சிந்தனையாளன். அடிபட்டவனைக் கீழே கிடத்தி இருந்தார்கள். அருகே சென்று பார்த்தான், திடுக்கிட்டுப் போனான்; அடிபட்டுக் கீழே கிடந்தவன், உலகநாதன்.

"ஐயா! இவரை ஏன் இப்படித் தாக்கினீர்கள்? அமளிக்குக் காரணம் என்ன?" என்று பரிவுடன் சிந்தனையாளன், கேட்டான்.

"பயல், முன்கோபக்காரன். யாரோ ஒருவன், இவனுடைய ஊரிலே சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னானாம். ஆஹா! என் ஊரைப் பற்றியா கேவலமாக இழிவாகப் பேசுகிறாய்? என்று கூவி அவன்மீது பாய்ந்து அடித்தான்; தடுத்தார்கள், அடங்கவில்லை; பிறகு அனைவரும் சேர்ந்து, கொடுத்தார்கள் பலமாக; பயல் கீழே உருண்டான்; இவனுடைய ஊரிலே உள்ள சாக்கடை நாற்றமடிப்பதைச் சொன்னால் கூடவா, கோபம் வருவது! முட்டாள்தனமல்லவா அது!" என்று ஒருவர் விளக்கம் தந்தார்.

உலகநாதனைப் பார்த்தான்—அவன் தன்னிடம், தேசியமே போலி, என்று பேசிய பேச்சை நினைத்துக் கொண்டான்—அவன் ஊரைப்பற்றி யாரோ கேவலமாகப் பேசினது கேட்டு, இவ்வளவு ஆத்திரம் பிறந்ததே, இவனா, உலகமே என் நாடு! எனக்கு நாடு என்ற எல்லைக்கோடுமீது பற்றுக் கிடையாது! என்று பேசிய உலகநாதன்!!—என்று நினைத்தான்—மயக்கம் வந்தது சிந்தனையாளனுக்கு.

#### தத்துவம் பேசலாம் ஆனால்.........

தம்பி! ஓ. ஹென்ரியின், சிறுகதையை, கூடுமான வரையில், புரியவைக்க முயன்றிருக்கிறேன் அதற்கான வடிவம் அமைத்து—அவ்வளவுதான்—அந்த முழுச் சுவையைத் தர இயலவில்லை.

'ஒரே உலகம்' என்று பேசுபவர்களிடம் தமது நாடு தமது ஊர் என்ற உடன், எப்படிப்பட்ட ஆத்திர உணர்ச்சி ஏற்படும், என்பதைக் கதை வடிவாக்கிக் காட்டி, தத்துவம் பேசலாம் தாராளமாக. ஆனால் பற்று, பாசம், அதனால் வரும் எழுச்சி இவைகளைப் போக்கிக்கொள்ள முடியாது என்பதை, அழகாக விளக்கிவிட்டார், ஓ. ஹென்ரி.

ஃ

திராவிட நாடாவது, தமிழ் நாடாவது, இந்தியா ஒரே நாடு, இதிலே என்ன, என் நாடு, என் இனம், என்ற குறுகிய மனப்பான்மை, என்று பேசுகிறவர்களைக் கண்டால், தம்பி! ஓ. ஹென்ரியின் கதையை நினைத்துக்கொள்.

ஃ

நாம், திராவிடம் கேட்கும் போது, பாரதம்—ஒரே இந்தியா—என்றெல்லாம் உபதேசம் செய்கிறார்கள்—பலர்—மேதாவித்தனம் என்ற என்ற எண்ணத்தில். அவர்களே, அவர்களின் மாநிலம், அதன் உரிமை, அதன் தொழில் வளம்,

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 அக்டோபர் மாதம் 2-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.

# புதை பொருளாராய்ச்சி

ஒரு நாட்டின் எதிர்கால சரித்திரத்தைக் கட்டி யெழுப்புவதில் அந்த நாட்டு மக்கள் எவ்வளவு அக்கறை காட்ட வேண்டுமோ, அதேயளவு அந்த நாட்டின் கடந்த கால சரித்திரத்தை ஆய்ந்து அகழ்ந்து அறிவதிலும் அவர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

அதிலும் தனக்கென்று ஒரு தனி நாகரிகம், பாரம்பரியம், பண்பாடு, முதுசம் உள்ள இனம், தனது பழங்கால வரலாற்றை அறியாமலும், தேடிப் பாதுகாக்காமலும் உறங்கிக் கிடப்பது பெரும் இழிவு மட்டுமல்ல, இனத்துக்கே நஷ்டமுமாகும். எதிர்கால சந்ததியினர் எழுச்சி பெறுவதற்குள்ள ஓர் அரிய மார்க்கத்தை மூடி வைப்பதாகும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமான ஆதிக்கமும் வளர்ச்சியும் உடையவர்கள் என்று சொல்லப்படுகிறது. சமகாலச் சரித்திரச் சான்றுகள் இதற்குச் சாட்சி பகருகின்றன. விஜயன் இலங்கைக்கு வருமுன்பே தமிழர் இங்கு வாழ்ந்தார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் நிலைநாட்டுகின்றார்கள். தொடர்ந்து பல தமிழ் மன்னர்கள் பல்வேறு கால கட்டங்களில் ஈழத்தில் ஏகசக்ராதிபதிகளாக அரசோச்சினார்கள் என்று சிங்கள சரித்திர இதிகாசங்களே இயம்புகின்றன.

அப்படியானால் இலங்கையில் தமிழினத்தின் பண்டைக் கால நாகரிகம்—சரித்திரம் இவையெல்லாம் ஓர் இடத்திலோ அன்றிப் பற்பல இடங்களிலோ புதையுண்டு கிடக்கத்தானே வேண்டும்? அவை எங்கு கிடக்கின்றன? இந்த அகழ் ஆராய்ச்சியில் ஈடுபடுவார் யாரும் இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கதாகும்.

இலங்கையின் புதைபொருள் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. [இது சம்பந்தமாகக் கடந்த வாரச் சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையை நேயர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.] இந்த 70 வருட காலத்தின் ஆரம்ப கட்டத்தில் வெள்ளைக்கார உத்தியோகத்தர்கள் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவுக்குப் பொறுப்பாயிருந்தார்கள். அந்தக் காலத்தில் நடைபெற்ற அகழ்வுகளினபோதுதான் தமிழர் தம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் சுட்டும் ஒரு சில சின்னங்களாவது கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பொலநறுவைச் சிவ—பார்வதி விக்ரகங்கள், சமயகுரவர்களின் வெண்கலச் சிலைகள், பண்டையகால நகைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதன் பின்னர் எங்கு அகழ்வு நிகழ்ந்தாலும் சிங்களச் சின்னங்கள் தாம் வெளிவருகின்றனவே தவிர தமிழ்ச் சின்னங்கள் அகப்படுவதாகத் தெரியவில்லை. இதன் மர்மம் என்ன?

அநுராதபுரத்தில் துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன் ஆட்சி புரிந்தான். அவனுக்கு முன்னர் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் நீண்ட நெடுங்காலம் நெறிமுறை தவறாது ஆண்டிருக்கிறான். மகாவம்சமே அவன் புகழையும் கொற்றத்தையும்பற்றிப் பேசுகிறது. ஆயினும் அநுராதபுரத்தில் அகழ்வு நடத்தினால் அகப்படுவதெல்லாம் துட்டகைமுனு காலப் பண்டங்களாயிருக்கின்றனவே தவிர, எல்லாளன் காலத்து உப்புக் கலயம்கூட அகப்படுவதாயில்லை. இதன் அந்தரங்கம் என்ன? தமிழ் பேசும் மக்கள் இந்த அதிசயத்தைப்பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

இலங்கையின் புதை பொருள் ஆராய்ச்சி இங்கு வாழ்ந்த எல்லா இன மக்களினதும் கலாச்சாரங்களையும், எல்லா மதப் பண்பாடுகளையும் தழுவியதாக அமைய வேண்டும் என்பது சட்டபூர்வமான வரையறையாகும். ஆனால் நடப்பது மட்டும் சிங்கள—பௌத்த அகழ் ஆராய்ச்சியாகவே இருந்து வருகிறது!

வெள்ளைக்காரரின் வருகைவரை யாழ்ப்பாணத்து தமிழ் அரசர்கள் தொடர்பாக இலங்கையின் வடபாகத்தையும், அவ்வப்போது இலங்கை முழுவதையும் ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ராஜதானிகள் நல்லூர் சங்கிலித்தோப்பிலும், வல்லிபுரத்திலும், மாவிட்டபுரத்திலும் மாறி மாறி அமைந்திருக்கின்றன. தமிழ்க் குறுநில மன்னர்களின் அரசவைகள் வன்னியிலும், சிலாபம், புத்தளம், மாதோட்டம், திருகோணமலை, நிலாவெளி, மூதூர்—கொட்டியாபுரம், வெருகல், உன்னிச்சை சாந்தமலை. போர்த்தீவு, மண்டூர், பட்டிப்பளை, திருக்கோவில் ஆகிய இடங்களிலும் இருந்தனவென்று எழுதாச் சரித்திரங்களும், கர்ணபரம்பரைக் கதைகளும் எடுத்தியம்புகின்றன. இங்கெல்லாம் புதை பொருளாராய்ச்சி நடத்த வேண்டும் என்ற எண்ணம் சமீபகால சிங்கள அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை; ஏற்படுமா என்பதும் சந்தேகமே

புதை பொருள் ஆராய்ச்சித்துறையில் தகுந்த தமிழர்கள், ஆராய்ச்சியில் நாட்டமும் பட்டமும் பெற்றவர்கள் இல்லாதது இனத்துக்குப் பெரும் குறையாக இருக்கிறது சிங்கள ஆராய்ச்சியாளர்கள் வெளியிடும் ஒரு சார்புள்ள கருத்துக்களை நடுநின்று நோக்கவோ, சரிபிழை பார்க்கவோ, மறுத்துரைக்கவோ யாரும் இல்லை. இது அவர்களுக்கு அசட்டுத் துணிவைத் தருகிறது. இதன் பயனாக நாளிலும் பொழுதிலும் சரித்திரம் திரிக்கப்படுகிறது; வரலாறு வளைக்கப்படுகிறது! கடந்த காலம், நிகழ்காலத்தில் சிங்கள மயமாகச் சிருஷ்டிக்கப்படுகிறது!

இந்த பாரபட்ச அநியாயத்தைத் தடுத்து திருத்த பல்கலைக் கழகப் பட்டதாரிகளான இளைஞர்கள் பலர் முன்வர வேண்டும். திரும்பத் திரும்ப ஆசிரியத் தொழிலுக்கும் அப்புக்காத்தர் தொழிலுக்கும், அரசாங்க உத்தியோகங்களுக்கும் மட்டும் போய்க்கொண்டிராமல் சரித்திர ஆராய்ச்சி, அகழ் ஆராய்ச்சி, புதை பொருள் ஆராய்ச்சி போன்ற துறைகளிலும் புக வேண்டும். ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும்.

ஒரு இனத்தின், ஒரு நாட்டின், புதை பொருள் ஆராய்ச்சி ஒரு தனி மனிதனால் செய்யக்கூடியதல்ல இன்றையச் சுதந்திரனில் மூன்றாவது பக்கத்தில் வெளியாகும் ஆபிரிக்க எகிப்திய அஸ்வான் பிரதேசப் புதை பொருள் ஆராய்ச்சியைப்பற்றிய கட்டுரையை நேயர்கள் படித்துப் பார்த்தால் இந்தப் பெரும் பணி எத்தகைய பிரமாண்டமானது என்பதை ஓரளவு உணரலாம்.

ஈழத் தமிழகத்தில் புதை பொருள் ஆராய்ச்சி நடத்த வேண்டுமானால் அதை ஒரு அரசாங்கத்தினால்தான் நடத்த முடியும். அல்லது ஒரு பெரிய ஸ்தாபனரீதியாக அது நடத்தப்பட வேண்டும். சிங்கள அரசாங்கம் இவ்விஷயத்தில் நாட்டங்கொள்ளும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. தமிழ்ப் பிரதேசத்துக்குச் சுயாட்சியேற்பட்டு ஆளுந் தமிழரசு மலருமானால் நாம் நிச்சயமாக நமது பிரதேசத்தில் அரிய புதை பொருட்களை அகழ்ந்தெடுத்துப் புதிய சரித்திரம் [illegible] ஏற்படுத்தலாம் என்பது நிச்சயம். இதற்குத் திருமலையில் உருவாகும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் [illegible] ஒத்துழைப்பு நல்க வழியுண்டு என்று நம்புகிறோம்;

# அமெரிக்காவில் பெரிய சிவன் கோயில் இருக்கிறது

அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் இருக்கும் கோயில்களில் மிகப் பெரியது ஓர் இந்துக் கோயிலாகும். அங்கே தமிழ் மொழியின் செல்வாக்கையும் காணமுடிகிறது.

கொலம்பஸ் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே மிகச் சிறந்த நாகரிகத்தின் உச்சத்திலிருந்திருக்கின்றார்கள் ஆஸ்டெக்குகள். கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் மனிதகுலம் எத்தனையோ வழிகளைப் பின்பற்றக்கூடிய பலமிக்க உதாரணங்களாக வாழ்ந்திருக்கிறார்கள் இவர்கள்.

மெக்ஸிகோ பட்டினத்திலுள்ள மிகப் பெரிய ஆலயம் ஒரு சிவன் கோவில். மேலும் இக்கோவிலில் ஆலயப் பணி புரிய 3000 தேவதாசிகள் இருந்திருக்கிறார்கள். கோபுரங்களுக்குப் பெயர்பெற்றது தென்னிந்தியா. மெக்ஸிகோவிலும் இந்தக் கோபுரங்களைக் காண முடிகிறது.

மேற்படி விவரங்கள் "இந்து அமெரிக்கா" என்ற புத்தகத்தில் தரப்பட்டிருக்கின்றன. பம்பாயில் பிரசுரிக்கப்பட்ட இப்புத்தகத்தை எழுதியவர் சமன் லால்.

## 8000 ஆண்டுகளுக்கு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அற்புத சௌந்தரியம் வைகறையில் அனுபவிப்பதற்கென்றே நிர்மாணிக்கப்பட்டது என்று சில நிபுணர்கள் கருதுகிறார்கள்.

### நகர்ந்து ஓடும் சிலை

அந்தக் காலத்தில் வணங்கப்பட்டுவந்த சூரியதேவனின் சிலையொன்று இருக்கிறது. எதிரேயுள்ள நைல் நதிக்கப்பால், மலைகளுக்குப் பின்னாலிருந்து கதிரவன் மேலெழும்பும்போது, இச் சூரியதேவனின்மீது படியும் பொற்கதிர்கள் அந்தச் சிலையை உயிர் பெற்றெழச் செய்து கதிரவனிடம் விரைந்தோடி வைகறைக்கு வணக்கம் தெரிவிப்பதுபோல பிரமையூட்டுகின்றன இச் சூரிய சிலைக்குக் கீழே, வாயில் முகப்புகளும் பிரமாண்டமான மண்டபங்களும் இணைந்திருக்கும் வியப்பே வியப்பு. வருடத்தில் சில தினங்களில் சூரியனின் காலைக் கதிர்கள் இவ்வாயில்கள், மண்டபங்களுக்கூடாக நெடுந்தூரம் கடந்து அதி தூரத்திலுள்ள மண்டபஎல்லைச் சுவர்களில் பொறித்திருக்கும் சிற்பங்களையும் வண்ணச் சித்திரங்களையும் உயிருட்டித் துலக்குகின்றன.

### நிபுணரின் பரிதாபம்

துரதிஷ்டமாக இச் சுவர்கள் இடம் பெயர்க்கக்கூடிய அளவு திடகாத்திரமானவையாக இல்லை. எனவே தான் இக் கோயிற் கூட்டத்தைச் சுற்றி ஒரு மதிலை எழுப்பி அஸ்வான் நீரைத் தடுத்து வைக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த மதிலே அஸ்வான் அணைக்கட்டளவு உயரமாயிருக்க வேண்டும். சுமார் $1\frac{1}{2}$ அல்லது 2 கோடி ரூபா இதற்குத் தேவைப்படலாம். "இந்தத் தொகை அவ்வளவு பெரிதல்லவே! நவீன குண்டு போடும் விமானங்கள் சிலவற்றின் விலைக்கு அப்பாற்பட்டதல்லவே இந்தத் தொகை". இவ்வாறு பரிதாபமான குரலில் கூறினார் ஒரு புதை பொருள் ஆராய்ச்சி நிபுணர்.

இவ்வாலயங்கள் ஒரு புறமிருக்க எண்ணிறந்த வேறு பல பொக்கிஷங்களுக்கும் ஆபத்தேற்பட்டிருக்கிறது. 300க்கு மேற்பட்ட கல்லறைகள்—மனிதகுல வளர்ச்சியில் பழைய கற்கால நாகரிகத்திற்கும் புதிய கற்கால நாகரிகத்திற்கும் இடையேயுள்ள இடைக்காலத் தொடர்பைத் துலக்க வல்ல சின்னங்கள்—எல்லாம் மறையப் போகின்றன. நவீன கதிரியக்கப் பரிசோதனைகளின்படி இக்கல்லறைகள் சுமார் 8400 வருடங்களுக்கு மேற்பட்டவை!

சென்ற வருஷம் ஐ. நா. கல்வி விஞ்ஞான ஸ்தாபனத்தின் வேண்டுதலின் பேரில் பிரெஞ்சு பூமிசாஸ்திர மேதைகள் நூபியாப்பிரதேசத்தை விமானத்திலிருந்து படம் பிடிக்க எகிப்து அரசாங்கம் அனுமதித்தது. இதில் பிடிக்கப்பட்ட படங்கள் இப்பொழுது நுண்ணிய பூதக்கண்ணாடிகளின் உதவி கொண்டு பரிசீலிக்கப்படுகின்றன. நாகரிக வளர்ச்சிக் கோவையில் புதிதாக நப்புத் துலக்கும் சின்னங்கள் எதுவும் உண்டா என்பதே இப்பரிசீலனையின் நோக்கம்.

அஸ்வான் புதைபொருட்களைக் காப்பாற்றுவதில், புதைபொருட் பிரியர்களுக்கு ஊக்கமூட்டும் சில சலுகைகளை எகிப்திய கலாச்சார மந்திரி சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்.

(1) எகிப்திய நூதனசாலைகளுக்குத் தேவைப்படக்கூடிய ஒரு சில விசேஷ திரவியங்களைத் தவிர, அகழ்ந்தெடுக்கப்படும் புதைபொருட்களில் சரிபாதியை பிறநாட்டு ஆராய்ச்சியாளர் தம்முடன் எடுத்துச் செல்லலாம்.

(2) மீட்கும் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க சாதனை புரியும் ஆராய்ச்சியாளர்கள், பின்னால் சகாரா, கெய்ரோ ஆகிய இடங்களிலுள்ள பிரமிட்பூட்டுப் புதை பொருட்களை அகழ்ந்தெடுக்கவும், அவற்றில் பாதியைத் தம் நாடு கொண்டு செல்லவும் அனுமதிக்கப்படுவர்.

(3) அகழ்ந்தெடுக்கப்பட்டுப் பரிசீலனைக்கென கெய்ரோவில் 1903 தொடக்கம் பாசறைகளில் தேங்கிக் கிடக்கும் பொருட்களில் தெரிந்தெடுத்துக் கொண்டு போகவும் அனுமதிக்கப்படுவர்.

### நேரம் விரைகிறது

நூபியா புதை பொருட்களை மீட்கும் வேலையாவும் 1964-ம் ஆண்டிற்குள் முடிவடைய வேண்டும் நீண்ட காலம்போல் தோற்றலாம். ஆனால் இருக்கும் அவகாசம் மிக மிகச் சிறிது. ஏனெனில் நீரின் கீழ் ஏற்கனவே மறைந்திருக்கும் ஆலயங்கள் வருடத்தில் இரண்டு, மூன்று மாதங்களுக்கே வறண்டிருக்கும், சில இடங்களில் இந்த நாலு வருடத் தவணைக்குள்ளும், வேலை நடைபெறக் கூடிய நாட்கள் 60 தான் அத்துடன் அங்கிருக்கும் சுவாத்தியநிலை வேறு தொந்தரவு உள்ளூர் மக்களே துடிக்கும் அளவிற்கு உஷ்ணம் 120 பாகை வரை உயரும்.

ஆராய்ச்சியாளர்க்கு உணவு விமானமூலம் வீசப்பட வேண்டும். ரொட்டுகளோ கிடையாது. கூலிகளும் வெளியிலிருந்தே கொண்டுவரப்படல் வேண்டும். நூபியாவிலுள்ள ஆண்களெல்லாரும் தொலைவிலுள்ள எகிப்திய நகரங்களில் வீட்டு வேலைக்காரர்களாய்ப் போய் விடுவார்கள். வருடத்தில் அல்லது இரு வருடத்தில் ஒரு முறைதான் குடும்பங்களுக்குத் திரும்புவார்கள்.

நூபியாவின் கலைப் பொக்கிஷங்களைக் காப்பாற்றத் தேவையான நிதி உடனே சேர்ந்தால் உலகிலுள்ள எகிப்திய நாகரிக நிபுணர்களில் மிகச் சிறந்தவர்கள் இங்கே அனுப்பிவைக்கப்படுவார்கள். பிற நாடுகளுக்குப் போக அனுமதிக்கப்படும் பகுதி போக ஏனைய கோவில்களும் சின்னங்களும் நைல் நதி தீரத்தில் மூன்று பெரிய இடங்களில் சேமிக்கப்படும். இவற்றுக்கு மத்தியிலே இந்தச் சௌந்தரநிதிகளுக்கு இணையான மாபெரும் செயற்கை நந்தவனங்களும் நிர்மாணிக்கப்படும். உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்கு விடுதிகளும் அமைக்கப்படும். முக்கியமாக பிலே, அபு சிம்பெல், கலாப்ஷா ஆகிய மூன்று மையங்களைச் சுற்றி எழுப்பப்படும் இப் பூவுலக சொர்க்கம் நைல் நதியோரமாக 175 மைல் வரை நீண்டிருக்கும்.

இந்தப் பணிக்குத் தேவையான கோடிக்கணக்கான ரூபா சேருமா? வான் வெளிப் பயண சகாப்தத்திலுள்ள சாதனங்களும் உலகிலுள்ள செல்வப் பெருக்கங்களும் இம் மாண்பு நிறைந்த பணிக்கு உதவுவதில் தவறிவிட்டால், அபு சிம்பெல் ஆலயத்திலுள்ள 4000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அந்த இராக்ஷஸ உருவங்கள் எம்மைப் பார்த்து நகைக்கும் —20-ம் நூற்றாண்டின் மனிதர் எவ்வளவு சிறியவர்கள், எவ்வளவு சின்னத்தனமானவர்கள் என்று!!!

★

[நிதிக்கு உதவ விரும்புபவர்கள், கலாச்சார, விஞ்ஞான ஸ்தாபன நூபியா நிதி, லொயிட் வங்கி லிமிட்டெட், 10 மூர்கேட், லண்டன் E. C. 2 என்ற விலாசத்திற்குக் காசோலைகள் அனுப்பலாம்.]

—தமிழாக்கம்: செ. கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைப் பல்கலைக் கழகத்தில் வன்னியசிங்கம் மண்டபம்

## அமைக்குமாறு காப்பு நிதி ரூ. 525-00 வழங்கப்பட்டது

அமரர் வன்னியசிங்கத்தைப் போல் நெஞ்சுத் துணிவான ஒரு வீரரை நாம் காணமுடியாது. பயம் என்பதையே அறியாதவர் அவர். வகுப்புக் கலவரத்தினல் 1956-ல் கல்லோயாப் பள்ளத்தாக்கு கொந்தளித்துக் கொண்டிருந்த வேளையில் தட்டந்தனியாக என்னையும் அழைத்துக் கொண்டு அங்கு பிரவேசித்தார் வன்னியசிங்கம் 'இந்த நேரத்தில் ஏன் வந்தீர்கள்? பொலீஸ் பாதுகாப்புக் கூட இல்லாமல்......'' என்று கேட்டார் அங்கிருந்த பொலீஸ் அதிகாரி. ''வராமல் என்ன செய்வது? எங்கள் தமிழ் மக்கள் இன்னலுறும் போது அவர்களை வந்து நாங்கள் பார்க்காவிட்டால் வேறுயார் பார்ப்பார்கள்?'' என்று அடித்தாற்போல் கேட்டார்; வன்னியசிங்கம். அவர் வீரமும் துணிவும் அத்தகையன—

இவ்வாறு கடந்த 21-ந் தேதி புதன்கிழமை கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற பெரியார்கள் விழாவில் அமரர் வன்னியசிங்கத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றிய மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறினர்.

பிரஸ்தாப கூட்டத்திற்கு திரு. எஸ். டி. சிவநாயகம் தலைமை தாங்கினர்.

செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் பேசுகையில், அமரர் வன்னியசிங்கத்தோடு தாம் யாழ்ப்பாணத்திலும் சர்வகலாசாலையிலும் உடன் மாணவராக இருந்த விருத்தாந்தங்களைக் கூறி, 'வன்னியசிங்கத்தைப் போன்ற அரசியல்வாதிகளும் திறமைசாலிகளும் தோன்றினலும் தோன்றலாம் ஆனல் அவரைப் போன்ற நேர்மையாளரைக் காண்பது அபூர்வத்திலும் அபூர்வம்' என்று பாராட்டினர்.

ஜனப் எம். இஸட். எம். மசூர் மவ்லானு பேசுகையில் அமரர் வன்னியசிங்கம் காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகியாக அமர்ந்து பட்ட அடியையும், உதையையும், இன்னலையும், இம்சையையும் தத்ரூபமாக வர்ணித்தார். கேட்போர் மனம் உருகினர். பெண்கள் கண்ணீர் மல்கினர்.

திரு. ஈழவேந்தன் அமரர் வன்னியசிங்கத்தின் இலட்சியத்தையும் மறைமலையடிகளின் இலட்சியத்தையும் இணைத்துப் பிணைத்துப் பேசினர். தனித் தமிழையும், தமிழ் இயக்கத்தையும் தமிழ் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும், பரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நுவரெலியா தமிழ்ச் சங்கத்தினர் ரூ. 525-00-க்கு ஒரு காசோலையை மட்டக்களப்புப் பிரதிநிதியிடம் கையளித்து அதைத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்குச் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அச்சிறு தொகையை காப்பு நிதியாக வைத்துத் திருமலையில் நிறுவும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அமரர் வன்னியசிங்கத்தின் பேரால் ஒரு மண்டபம் எழுப்புமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஈற்றில் ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரால் ''மூச்சை விடு பேச்சை விடாதே'' என்ற ஹாஸ்ய நாடகம் பலத்த வரவேற்புடன் நடத்தப்பட்டது.



பெரியார்கள் தின விழா அண்மையில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் கொண்டாடப்பட்டபோது செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் அமரர் கு. வன்னியசிங்கம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறர் (வலம்) விழாவில் இடம் பெற்ற ராஜ் நகைச் சுவை நாடக மன்றத்தாரின் ''மூச்சை விடு, பேச்சை விடாதே'' என்ற நாடகத்திலிருந்து ஒரு காட்சி.

## பண்டிதர் இரத்தினத்துக்கு பாராட்டு

அண்மையில் மாஸ்கோவில் நடைபெற்ற கீழைத்தேச அறிஞர்கள் மாநாட்டுக்கு ஈழத்துப் பிரதிநிதியாகச் சென்று திரும்பிய பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்றச் சங்கம் ஒரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறது.

இவ்விழா ஒக்டோபர் 1-ந் தேதி சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறும்.

திருவாளர்கள் எஸ். தொண்டமான் எம். பி., வி. ஏ. கந்தையா எம். பி., செ. இராசதுரை எம். பி. உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

### அடுத்த வாரம்

பண்டிதர் கா. பொ. இரத்தினம் ருஷியத் தலைநகரான மாஸ்கோவில் ஆற்றிய சொற்பொழிவின் சென்றவாரத் தொடர்ச்சி அடுத்த வாரச் சுதந்திரனில் இடம் பெறும்.

## தமிழருக்குப் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதப்படுவதில் பெரும் வேடிக்கை நடைபெறுகிறது. உதாரணமாக சித்திவேலாயுதம் என்ற தமிழ்ப் பெயர் சக்திவிய வேலாயுதம் என்றுற் போலச் சிங்களத்தில் கொலை செய்து எழுதப்படுகிறது.

### பதவி தமிழருக்கு இல்லை

நெடுங்காலமாக இல்லாத சிங்கள எழுத்து ஏற்பாடு இப்போது ஏன் வந்தது என்று உள்ளூர ஆராய்ந்து பார்த்ததில் ஒரு உண்மை புலனுயிற்று. அதாவது மத்திய தந்திக் கந்தோர் வேலைகளைச் சிங்கள மயமாக்கி அங்கு தமிழர்களுக்குப் பதவிகள் போவதைத் தடுக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. முதற்படியாக சினியர் சுப்பர்வைஸிங் ஆபீஸர் முயற்சியை ஆரம்பித்திருக்கிறர்.

### தந்திரம்

வெகு விரைவில் சீவ் டெலிகிராப் மாஸ்டர் பதவி காலியாக விருக்கிறது. அந்தப் பதவிக்கான பரீட்சை சமீபத்தில் முடிந்தது. ஒரு தமிழரே சகல தகுதிகளும் பெற்றிருப்பதால் அவருக்கே அந்தப் பதவி கொடுக்கப்படலாம் என்ற நம்பிக்கை மத்திய தந்திக் கந்தோர் வட்டாரங்களில் நிலவுகிறது. அந்தத் தமிழரை இந்தப் பதவிக்கு வராமல் தடுக்கும் உபாயமாகப் பயிற்சி காட்டவே இப்படிச் சிங்களத்தில் அலுவல் பார்க்கத் தொடங்கும் தந்திரம் மத்திய தந்திக் கந்தோரில் கையாளப்பட்டது என்று தெரிகிறது.


ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல், த. பெட்டி: 649, கொழும்பு.





சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 246



"வட்டக் கருவிழி மங்கையே—ஒளி கொட்டும் நிலவுக்குத் தங்கையே..!!"

எனும்படி இணையற்ற எழில் பெற இதோ!!

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்!!

★ ★ ★

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்;

கண்ணைக்கவரும் அற்புத நிறங்களிலும்;
ஒப்பற்ற நவீன டிசைன்களிலும்;
குறைந்த விலையிலும்
எங்கும் கிடைக்கும்.



இன்று மாலை
நாலு நாற்பத்திஐந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 100, மெயின் வீதி. கொழும்பு. மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்சர் வீதி.

—Mylads 574/60—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நீயும் கல்யாணம் செய்'

சிறுகதை — எழுதியவர்: "பொன்னு"

திண்ணையில் கிடந்த சாய்வு நாற்காலியில் வெறுமனே படுத்துக் கிடந்தேன். ஆனல் அந்த நாற்காலியில் படுத்துக் கிடப்பதாகவே தெரியவில்லை எனக்கு. என் கண்களின் முன்னல் வீட்டு முற்றத்தில் பலர் இருந்தும் அங்கு யாரும் இருப்பதாக என் நினைவுக்குப் படவில்லை. என் கண்களுக்கு எல்லாம் சூனியமாகவே தெரிந்தது. மனிதரோ, மிருகமோ, மரம் செடி கொடிகளோ எதுவுமற்ற ஒரு பரந்த வெளியில தன்னந்தனியளாக நின்று தவிப்பதைப்போலவே இருந்தது. அந்தப் பரந்த வெளியில் கண்ணுக்கெட்டிய தூரம்வரையிலும் ஒரு சிறு பொருளாவது தெரியாதா?- அந்தப் பொருள் என் ஏக்கத்தைத் தீர்க்கும் பொருளாக இருக்காதா? என்று ஏங்குபவளைப்போல கிடந்தேன். என் உடைமைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு, எதுவுமற்ற ஏழையாக-அனுதைபோல-கிடப்பதாகவே இருந்தது.

நேற்றுவரை இல்லாத இந்த ஏக்கமும் தனிமை உணர்ச்சியும் இன்று மட்டும் எப்படி என்னுள் வந்து புகுந்துகொண்டன?...நேற்று வரைவீடு, வாசல், பெற்றுர், உற்றுர் என்று எல்லாமே தெரிந்த என் கண்களுக்கு இன்று மட்டும் அவை மறைந்துவிட்டவை போல் வெறும் சூனியமாக இருப்பதேன்? என் வாழ்நாளில் இப்படி ஒரு நிலை என்றுமே ஏற்பட்டதில்லை எனக்கு.

நேற்றிலிருந்து கடந்த ஐந்து நாட்களாக என்னுடன் அன்போடு பேசிப் பழகிய அத்தான் நேற்றுப் பிற்பகலே கொழும்புக்குப் போய்விட்டார், அவ்வளவுதான் நடந்தது! கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னல் அவர் யாரோ, நான் யாரோ! பிறப்பு முதல் கூடவே இருந்த உற்றுர் பிரியும்போதுகூட ஏற்படாத இந்த ஏக்கம்-வேதனை- ஐந்தே ஐந்து நாட்கள் பழகிய அவர் பிரிந்ததும் ஏற்படுகிறதே! அதை ஒரு பெரிய விசித்திரமாக ஆக்கிக்கொண்டு இந்த மனம் இப்படித் தத்தளிக்கிறதே! மனித மனம்தான் எவ்வளவு விசித்திரமானது!

அப்படியே மெதுவாகக் கண்களை மூடிக்கொண்டேன். கண்களை மூடிக்கொண்டதும், திறந்திருந்தபோது இருந்த ஏக்கத்திலும் துயரத்திலும் சிறிதளவாவது குறைவதுபோலத்தான் இருந்தது. அது கனவுலகம்.

"மச்சி, மச்சி......" என்று யாரோ கத்துவதுபோல இருந்தது. திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தேன். என் மாமாவின் மகள் எட்டு வயதுச் சிறுமி வனஜா தான் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். எனக்கு எரிச்சல்தான் வந்துகொண்டிருந்தது "மச்சிக்கு இப்போ என்னடி வந்துவிட்டது இப்படித் தொண்டை கிழியக் கத்த...?" என்றேன் அதே எரிச்சலுடன்.

"எவ்வளவு நேரமாத்தான் மச்சி உன்னைக்கத்திறது? இந்தா, உனக்கொரு காயிதம் வந்திருக்கு......" என்று ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டு அவள் விளையாட ஓடிவிட்டாள். அவளுக்கென்ன தெரியும், விளையாட்டுப் பிள்ளை!

விலாசத்தைப் பார்த்ததுமே வசந்திதான் எழுதியிருக்கிறுள் என்பது தெரிந்துவிட்டது. வசந்தியின் கடிதமென்ருல் முன்னெல்லாம் ஒருகணம் பிந்தாமல் பிரித்துப் படிப்பேன். ஆனல் இன்று மட்டும் என்னவோ ஆறுதலாகத்தான் பிரித்தேன்.

அன்புத் தோழி மணிக்கு,

நேரடியாக வந்து உன்னைத் திட்டு திட்டென்று திட்ட வேண்டும்போல் இருக்கிறது நீ செய்த வேலைக்கு. ஆனல் வசதி கிடைக்கவில்லை. இதை எழுதுகிறேன்.

மணி! இத்தனை சீக்கிரத்தில் நீ உன் இலட்சியப் பாதையிலிருந்து வழுக்கி விழுந்துவிடுவாய் என்று நான் கனவிலும் கருதியிருக்கவில்லை. நாம் இருவரும் செய்துகொண்ட உறுதிமொழிகளையெல்லாம் எங்கேயடி பறக்கவிட்டுவிட்டாய்?...நீ கூறிய இலட்சியப் பேச்சுக்களையெல்லாம் மறந்து திருமணப் பதிவுக்கு எப்படியடி சம்மதித்தாய்?... எனக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கிறதே நீ நடந்துகொண்டது. வருஷக்கணக்காக உன் உயிர்த் தோழியாக இருந்தும் இப்போது உன்னைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறேனே நான். இந்த ஒரு மாத விடுதலை என்ன மாயத்தைக் கொண்டு வந்து உன் மனதுள் புகுத்திவிட்டதோ நான் அறியேன். நீ செய்துகொண்ட இந்தச் செய்கையால் உன்னேடு சேர்ந்து உன்னைப்போலவே இலட்சியப் பேச்சுப் பேசிய நான் தனித்தவளாகிவிட்டேன். இருந்தாலும் என் இலட்சியப் பாதையிலிருந்து நான் மட்டும் உன்னைப்போல் வழுக்கி விழுந்துவிடமாட்டேன் என்பது உறுதி.

இலட்சியத்தைக் கைவிட்டதும் விட்டாய்; திருமணப் பதிவு நடைபெறப்போகிறதென்று ஒரு வார்த்தை எனக்கு எழுதியிருக்கக் கூடாதா?......உன் உயிர்த் தோழியாக நான் இருந்து [illegible] இவற்றுக்கெல்லாம் நீ சரியான பதில் தந்தாகணும். எப்படித்தான் தரப்போகிருய் என்று நானுந்தான் பார்க்கப்போகிறேன்! உடன் பதில்.

உன் ஆருயிர்த் தோழி,
வசந்தி—

எனக்குள் நானே சிரித்துக்கொண்டபடி கடிதத்தை 'ரீப்போ'யில் வைத்தேன்;

வசந்தி எனக்கு அன்றும் தோழிதான்; இன்றும் தோழிதான்: இனி என்றும் தோழிதான் என் உயிர்த் தோழியல்லவா அவள். ஆனல் எனது இன்றைய நிலையில்தான் அவளின் இந்தக் கடிதம் எனக்குச் சிரிப்பைக் கொடுத்தது.

அவளுக்குச் சொல்லாமல் திருமணப் பதிவு செய்துகொண்டது என்ற அவளின் இரண்டாவது குற்றச்சாட்டை உண்மையில் நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கல்லாற்றுக்கும் காரைதீவுக்குமிடையில் அப்படி ஒன்றும் பெரியதூரமல்ல. அவளுக்குச் சொல்லியிருக்கத்தான் வேண்டும். ஆனல் நான்கு நாட்களுக்குள் பேசி நிறைவேற்றப்பட்ட திருமணப் பதிவைப் பற்றி அவளிடம் சொல்லிக்கொள்ள முடியாமல்போய்விட்டது. எப்படியிருந்தாலும் அது குற்றம்தான். அவளிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வேண்டும். ஆனல் திருமணப் பதிவுக்குச் சம்மதித்தது என்ற அவளின் முதல் குற்றச்சாட்டு, குற்றச்சாட்டாகவே படவில்லை எனக்கு.

பிறந்து ஒரு மாதம் பூர்த்தியாவதற்கு முன்னரே என் அன்னையை இழந்துவிட்டேனும் நான். அதன் பின்னர் என் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டவர்களில் எனது தாய் மாமன்தான் முதலிடம் வகித்தார். என் தந்தையைவிட என்னில் கூடிய அக்கறை கொண்டவர் அவர்தான் என்னைக் கண்கலங்கவிடாமல், துன்பமென்ருல் என்னவென்றே என்னை அறியச் செய்யாமல் இவ்வளவு படிக்க வைத்து என்னை ஆளாக்கிவிட்டதன் பெரும் பொறுப்பு மாமாவையே சாரும். நான் தெரிந்தவரை என்னைக் கண்டித்ததோ; கை நீட்டி அடித்ததோ கிடையாது அவர். இத்தனைக்கும் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னல் ஒருதடவை ஏதோ பொறுக்க முடியாத ஆத்திரத்தில் ஒரே ஒரு அடி அவர் என்னை அடித்துவிட்டு, மூன்று நாட்கள் சாப்பாடும் இன்றி அவர் அனுபவித்த வேதனையை இப்போது எண்ணிப் பார்த்தாலும் என் கண்கள் கலங்குகின்றன. இத்தனை செல்லம் எனக்கு இருந்ததற்குக் காரணம் நான் தாயற்றவள் என்பது மாத்திரமல்ல? ஒரே பிள்ளை என்பதுமாகும்.

ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்ததுமே மட்டக்களப்புப் பட்டணத்திலுள்ள உயர்தர பாடசாலை ஒன்றில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார் மாமா. பாடசாலையில்தான் காரைதீவுத் தோழி வசந்தியின் நட்பு எனக்குக் கிடைத்தது. இருவரும் உயிர்த் தோழிகளானேம். அவளை விட்டு நானே என்னை விட்டு அவளோ எந்த விஷயத்தையும் செய்தது கிடையாது.

வயது வளர வளர இயற்கையாகவே ஏற்படக்கூடிய இளமைப் பருவ இலட்சியக் கோட்டைகளும் வளர்ந்தன எங்கள் இதயங்களில். இருவரும் சேர்ந்துகொண்டு என்னென்னவோ திட்டங்களையெல்லாம் போட்டுக்கொள்வோம். இளமைப் பருவத்தில் விதம் விதமான எண்ணங்களுக்குத்தான் என்ன குறைச்சலா? கார்த்திகை மாதத்தில் திடீரென வெளித் தோன்றி—ஊரெங்கும் பறந்து வண்ணம் காட்டித் திரியும் எண்ணிலடங்கா வண்ணாத்திப் பூச்சிகளைப்போலத்தான் இளமைப் பருவத்து எண்ணங்களும் திடீரென வெடித்துச் சுதந்திரமுடன் பரவுகின்றன.

கல்யாணம் முடித்துக் குடும்பம் நடத்தும் பலரது வாழ்க்கையை நான் கண்டபோது கல்யாணம் என்பது பயங்கரமான ஒன்ருகவே பட்டது எனக்கு. பெரும்பாலும் கணவன்மாரது நடத்தையினுல் குடும்பத்தில் அடிக்கடி தோன்றும் சச்சரவுகளும், அவற்ருல் ஏற்படும் கோர விளைவுகளும், அந்த விளைவுகள் சின்னஞ்சிறு குழந்தைகளைத் தாக்கும் தாக்கமும் நிறைந்த குடும்ப வாழ்க்கையில் ஒரு வெறுப்பே ஏற்பட்டது. அந்த வெறுப்பு 'கல்யாணம் செய்துகொள்வதில்லை' என்ற முடிவில் என்னை நிறுத்தியது. கல்யாணத்தை வெறுத்த உள்ளம், படிப்பைத் தொடர்ந்து ஒரு முடிவு கண்டு உத்தியோகம் பார்க்கவே விரும்பியது. வீட்டில் நெருக்கினுல், கொஞ்சக்காலம் உத்தியோகம் பார்த்த பிறகு, தொடர்ந்து உத்தியோகம் பார்க்க அனுமதியளிக்கும் ஒருவரை மணந்துகொள்வது என்றும் தீர்மானித்திருந்தேன். உத்தியோகத்துடன் கல்யாணம் செய்துகொண்டால் குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட்டாலும் உத்தியோகத்தைக் கொண்டு நிம்மதியாக வாழலாமல்லவா?...

எனது இந்த இலட்சியத்தை வசந்தியிடம் நான் கூறியபோது, தான் கண்ட பல கசப்பான அனுபவங்களையும் எடுத்துக் கூறிய வசந்தி என் இலட்சியத்தைப் பூரணமாக ஆதரித்தாள். எனவே இருவரும் எங்கள் இலட்சியத்தை உறுதிப்படுத்திக் கொண்டோம். இது மூன்று வருடங்களுக்கு முன்னர் செய்துகொண்ட உறுதி.

கடந்த ஒரு வருடமாக வீட்டில் கல்யாணப் பேச்சு அடிபட்டது. நான், "படிக்க வேண்டும்" என்று சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தேன்.

இந்த விடுதலையில் கல்யாணப் பேச்சின் உக்கிரம் கூடியது. மாமாவே என்னை நேரடியாகக் கேட்டுவிட்டார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மாமாவிடம் சமாளிப்புக் காரணங்களைக் கூற என் மனம் இடம் தரவில்லை. எனவே நான் கல்யாணத்தை வெறுப்பதற்குரிய உண்மையான காரணத்தைத் துணிந்து கூறிவிட்டேன்.

மாமா என் தலையை அன்போடு தடவிக் கொடுத்தபடி, "மணி, இந்த இருபது வயது வரையிலேயும் உனக்கு ஏதாவது குறை வரவிட்டிருக்கேனும்மா? அந்த நிலையில் இனி மட்டும் உனக்குக் குறை வரவிடுவேனு?...நீ எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமாக இருக்கவேணும் என்றதுதான் எல்லார் விருப்பமும். குடி வெறியில்லாத, கெட்ட சகவாசமில்லாத' நல்ல குணமான, உனக்குப் பொருத்தமான ஒரு ஆளைத்தான் தெரிஞ்செடுத்திருக்கம் மணி. உன்ர மனம்போல நல்ல வாழ்வு வாழ்வாம்மா நீ. நீ நல்ல வாழ்வு வாழ்வதைப் பார்க்

(12-ம் பக்கம் பார்க்க)


## ப்ரம்மீகேச ரஞ்சன தைலம் (A)



கண்ருடு, கண்எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடிவிழுதல், நரையுண்டாகுதல், ஞாபகசக்தி குறைதல் முதலிய வியாதிகளை நீக்கி, தலைமயிரை அழகான கருநிறத்தில் இடைநெருங்க வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரைமயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானலும் "நரையும்" வழுக்கையும் உண்டாகாது. பெண்மணிகள் சேர்க்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் 3-50.

## (B) அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லா குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரை மயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச் செய்யும்படி சக்தி வாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகமாச் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

விலை: 6 அவுன்ஸ் 4-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET,
COLOMBO—13.



இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது

## உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

சோல் ஏஜண்டுகள்:

## ரெய்ஜு சன்ஸ் லிமிட்டெட்,

88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4243, 5060.

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் தமிழியக்க வாரம் கொண்டாடுக

## அக்டோபர் 13-லிருந்து

## அமரர் வன்னியசிங்கத்துக்கு

### அப்படி மதிப்பளிப்பதுதான் சிறப்பு

## தமிழ் பேசும் மக்களுக்கு யாழ்ப்பாணம் நகர மேயர் உருக்கமான வேண்டுகோள்

(யாழ்ப்பாண நிருபர்)

**கோ**ப்பாய் கோமான் கு. வன்னியசிங்கம் நினைவு விழாவில் யாழ் மேயர் திரு. பி. காசிப்பிள்ளை தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"வன்னியசிங்கம் அவர்கள் மீது உங்களுக்கு உண்மையிலேயே பற்றும் பாசமும் இருக்குமேயானால், வன்னியசிங்கம் அவர்கள் செய்த தியாகத்துக்கு நீங்கள் சிறிதளவேனும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுவீர்களேயானால் அவர் அமரத்துவம் அடைந்த இத் தினத்திலிருந்தாவது, 'நாங்கள் அரசாங்கத்துடன் சகலவிதமான கடிதத் தொடர்புகளையும் தமிழ் மொழி மூலமாகவே ஏற்படுத்துவோம்' எனச் சபதம் எடுத்துக் கொள்ளுங்கள்.

அவ்விதம் சபதம் எடுத்துக்கொண்டதற்கு அடையாளமாக அக்டோபர் மாதம் 13-ந் தேதி வரவிருக்கும் அவரது பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு வார காலத்தினை எல்லாம் தமிழியக்க வாரமாகக் கொண்டாடுங்கள்" என்று மேயர் வேண்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் தமிழரசுக் கட்சியால் கூட்டம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண மேயர் திரு பி. காசிப்பிள்ளை தலைமை வகித்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

வன்னியசிங்கம்!... எண்ணுகின்ற நேரத்திலெல்லாம் எங்கள் உள்ளங்களைப் பூரிக்க வைத்த அந்த உத்தமரை இழந்து இன்றோடு ஒரு வருடமாகிவிட்டது. தமது வாழ்நாளின் பெரும்பகுதியைத் தமிழினத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்த அந்தத் தமிழ் அறிஞரை, தியாகத்தின் திருவுருவை நினைக்க நினைக்க எங்கள் கண்களிலிருந்து பெருகும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில்தான் நாங்கள் இங்கே கூடியிருக்கிறோம். அரசியலை தமது சொந்த முன்னேற்றத்துக்கான படிக்கல்லாகப் பயன்படுத்திய பலரையும், அரசியலுக்காக தமது சொத்து, சுகம் அனைத்தையும் தியாகம் செய்த இவரையும் கண்ணாரக் கண்ட நேரத்திலேதான தியாகம் என்பதன் உண்மையான கருத்தை எங்களால் உணர முடிந்தது. அரசியல்வாதிகள் பலர் பொருளாதாரத்தில் வளர்பிறை போல வளர்ந்துகொண்டிருந்த நேரத்திலே இவர் தமது சொந்த நிலங்களையே விற்க வேண்டிய நிலை ஏற்பட்டபோதுதான் இவர் மேற்கொண்டிருந்த பணியின் மகத்துவத்தை மக்கள் உணரத் தொடங்கினார்கள்.

### வெற்றி வீரர்

இன்று பாராளுமன்றத்திலே தமிழ் பேசும் இனத்தின் ஒரே குரலாக விளங்கும் தமிழரசுக் கட்சிக்கு ஆரம்ப காலத்திலே அவ்வளவு வரவேற்பு இருக்கவில்லை என்பதை நாம் அறிவோம். கூட்டங்களை நடக்கவிடாமல் கல்லெறி. இந்தச் சூழ்நிலையில் அஞ்சாமல், அயராமல் நம்பிக்கையோடு நின்று உழைத்து வெற்றி கண்ட வீரர் அவர். அவரது தியாகத்தின் பலனை நாம் இன்று அனுபவிக்கிறோம். ஆனால் அதனை எங்களுடன் பகிர்ந்து மகிழ அவர் இன்று எங்கள் மத்தியிலே இல்லை. எங்களை விட்டுப் பிரிந்து வெகு தூரத்துக்கப்பால் சென்றுவிட்டார் என்றாலும் அவரது நினைவு, அவர் செய்த தியாகங்கள் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களை விட்டு ஒருபோதுமே அகலமாட்டா.

தமிழரசுக் கட்சி ஒன்றினாலேதான் தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைத் திரும்பப் பெற முடியும் என முழுக்க முழுக்க நம்பி அதற்காக உழைத்தவர் வன்னியசிங்கம். தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுடன் மாறுபட்ட கொள்கை உடையவர்கள்கூட வன்னியசிங்கத்தின் நேர்மைக்கு, தியாகத்துக்கு, சாதனைக்கு தலை தாழ்த்தி அஞ்சலி செய்கிறார்கள்.

### பம்பரம் போலச் சுழன்ற தியாகி

"எங்கெங்கு எனது பக்தர்களுக்கு விக்கினங்கள் நேருகின்றனவோ அங்கெல்லாம் நான் தோன்றுவேன்" என்று கிருஷ்ண பரமாத்மா அருளிச் செய்ததாக பகவத் கீதைமூலம் நாம் அறிகிறோம். அந்த மெய்வாக்கியத்துக்கிணங்க, தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட ஒரே ஒரு தியாகி அமரர் வன்னியசிங்கம் தான். பதவியாவில் கலகமா? அங்கே வன்னியசிங்கத்தைக் காணலாம். கந்தளாயில் நிலப் பங்கீடா? வன்னியசிங்கம் அங்கே நிற்பார். மட்டக்களப்பில் வகுப்புக் கலவரமா? எவரும் அழையாமலே அங்கு ஓடோடிச் சென்று தன்னால் இயன்றவை அத்தனையையும் செய்வார் வன்னியசிங்கம். இவ்விதத்தில் தம் வாழ்நாள் முழுவதும் தமிழ் பேசும் இனத்துக்கு விடுதலை தேடிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் பம்பரம்போலச் சுழன்று அதிலேயே செத்து மடிந்த பெருந்தகை அவர்.

### பாராளுமன்றத்தில் தமிழ் முழக்கம்

இலங்கைப் பாராளுமன்றத்திலே தமிழ் முழக்கம் செய்த மூதறிஞர் அவர். 1956-ம் ஆண்டில் வகுப்புக் கலவரம் தலைவிரித்துத் தாண்டவமாடிய நேரத்திலே, இலங்கைப் பாராளுமன்றத்திலே,

"பையார் வெம்பணத்துலகில்
பகையாலே பகை மறைத்து
நெய்யாலே நெருப்பளிக்க
நீள் நிலத்தில் கண்ட
தில்லை"

என்ற மேற்கோளை எடுத்துக் காட்டி தமிழ் முழக்கம் செய்த வன்னியசிங்கம் அவர்களைப் பின்பற்றுபவர்கள், இன்று பாராளுமன்றத்திலே அதிகமாகத் தமிழிலே பேசுவதில்லை என பத்திரிகைகளே எழுதும் அளவுக்கு நிலை ஏற்பட்டுள்ளதை நினைக்கும்போது எனக்குச்

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழினத்தின் இரட்சகர் அமரர் வன்னியசிங்கம்

## சாவகச்சேரிக் கூட்டத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

**த**மிழினத்தின் பாதுகாவலராகவும் இரட்சகராகவும் திகழ்ந்து அமரத்துவம் அடைந்தவர் திரு. வன்னியசிங்கம். அத்தகைய பெருந்தகையை நினைவு கூரும் இந்நாளில் அவர் விட்ட பணியைத் தொடர்ந்து நடாத்தத் தமிழினம் திடசங்கற்பம் செய்து கொள்ளவேண்டும். இதுவே நாம் அன்னாருக்குச் செய்யும் கைமாறாகும். இவ்வாறு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

சிறீ வேற்பிள்ளை வளர்த்தோர் கல்வி நிலையத்தாரால் நடாத்தப்பட்ட வன்னியசிங்கம் நினைவு விழாவில் பண்டிதமணி அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களின் திருவுருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:—

திரு. கு. வன்னியசிங்கத்தின் திருஉருவப் படத்தைத் திரைநீக்கம் செய்யும் தகுதி எனக்குக் கிடையாது. அத்தகைமை தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கே உண்டு. ஈழத் தமிழினத்தின் இக்கட்டான சூழ்நிலையில் தான் திரு வன்னியசிங்கம் போன்ற ஒரு உத்தமர் எமக்குக் கிடைத்தார். அவர் வெகு விரைவில் எம்மை விட்டுப் பிரிந்தமைக்கு முக்கிய காரணம் தமிழ் சமூகம் செய்த தவப்பயன் போதாமையே என்று கூற வேண்டும்.

திரு வன்னியசிங்கம் அவர்கள் தம் வாழ்நாளில் அனுபவிக்க வேண்டிய சுகபோகம் அத்தனையையும் வெறுத்து ஒரே ஒரு இலட்சியத்துக்காக வாழ்ந்தார். அவ்விதம் வாழும் தகைமை எல்லாரிடமும் இருக்க முடியாது. ஆகவேதான் அமரர் வன்னியசிங்கம் அவர்களைத் தமிழினத்தின் இரட்சகர் என்று நாம் பாராட்ட வேண்டியவர்களாகின்றோம்.

பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் பேசுகையில் "அரசியல் துறையிலும் சரி, மற்றைய துறைகளிலும் சரி எதிரிகளின் தாக்குதல் வருமுன் காப்போனாய்த் திகழ்ந்த ஒரு ஞானியை இழந்த நாங்கள் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

சாவகச்சேரி பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம், திரு. வி. வி. கந்தையா ஆசிரியர், திரு. ஏ. ஆர். ஆசீர்வாதம் ஆகியோரும், பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றோரும் பேசினர்.

## "தமிழரசுத் தலைவர்களை அழைத்துப் பேசுக"

### நாடு முன்னேற வேண்டுமானால் அதற்கு தமிழர்களின் ஒத்துழைப்பு அவசியம்

### "இந்து"ப் பத்திரிகை தலையங்கம்

["இலங்கைத் தமிழர்" என்ற தலைப்பின் கீழ் சென்னையிலிருந்து வெளிவரும் "இந்து"ப் பத்திரிகை கடந்த வாரம் எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது]

**யா**ழ்ப்பாணத்தில் நடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி மொழி பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மேற்படி தீர்மானத்தில் கட்சி தெரிவித்திருக்கும் கவலை ஆதாரமற்றதாய் இருக்க வேண்டும் என்றே நாம் நம்புகிறோம். இலங்கைத் தமிழர்களின் தத்துவம் பெற்ற பிரதிநிதி தமிழரசுக் கட்சி. "சிம்மாசனப் பிரசங்கத்தில், சிறுபான்மையினருக்கு நீதியும் நியாயமும் வழங்குவோம் என்ற வாய்ச்சொற்களுக்கும் ஜனவரி 1, 1961ல் சிங்களத்தை ஆட்சி மொழியாக முற்றிலும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளுக்கு மிடையே" யுள்ள இடை தூரத்தைக் காணும் தமிழர[illegible] கள் கலவரம[illegible] இருர்கள்.

### தமிழரசுக் கட்சியின் உறுதி

ஏற்ற நடவடிக்கைகள் ஏதும் எடுத்தாலன்றி, 'சிங்களம் மாத்திரம்' என்ற சட்டம் ஒரு பெரிய, முக்கியமான சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களின் மொழிக்குரிய ஸ்தானத்தை மறுப்பதோடல்லாது, தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் எதிர்காலத்தையுமே நிச்சயமற்றதாக்கிவிடும். மேற்படி தீர்மானம் சுட்டிக் காட்டுவது போல், சில அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களின் பேச்சு தமிழரசுத் தலைவர்களின் பயத்தை மேலும் அதிகரிக்கிறது. "தமிழ் மொழியினதும், தமிழ் பேசும் மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்க" தன்னாலியன்ற அத்தனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் என்ற உறுதியை கட்சி மீண்டும் வற்புறுத்திக் காட்டியிருக்கிறது.

### சாந்தி தேவை

இலங்கை அரசாங்கம் நிலைமையை இவ்வாறு சீரழிய விட்டு நாட்டில் ஒரு நெருக்கடியை உண்டாக்கும் [illegible] கிறது. அதிலும் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யத் திட்டப்பட்டிருக்கும் 10 வருடத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வர, நாட்டினது சக்தியும் ஒருமுகமாக இயங்க வேண்டிய கட்டத்தில் இப்படி ஒரு அசம்பாவிதம் நிகழாது என்றே நம்புகிறோம்.

### ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டும்

மொழி விஷயத்தில் சமரஸம் ஒன்று ஏற்பட வேண்டுமென்றே பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகா மீண்டும் மீண்டும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அத்துடன் தனது கணவரின் கொள்கையையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று விரதம் பூண்டவர் சிரிமாவோ. அந்தக் கணவர்தான் தமிழரசுத் தலைவர் செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்று புத்திசாலித்தனமாக நடந்துகொண்டவர். ஆனால் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்த சம்பவங்களின் வேகத்தினால் மேற்படி ஒப்பந்தம் நடைமுறைக்கு வர முடியவில்லை. மீண்டும் நாட்டில் கலவரங்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால் ஏதாவது ஒரு உருவத்தில் அவ்வொப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். சிங்களவர்களையும் தமிழர்களையும் ஒன்று படுத்தி, இவ்விரு இனத்தவர்களின் ஒன்றுபட்ட உழைப்பால் இலங்கை முன்னேற முடியும். இதற்குரிய அரிய சந்தர்ப்பத்தை இலங்கைப் பிரதமரும் ஏனைய தலைவர்களும் தவறவிடமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

### செய்ய வேண்டியவை

இதற்கேற்ற இரண்டு உடனடிப் பரிகாரங்கள் இருக்கின்றன. ஒன்றில் அரசாங்கம் "சிங்களம் மாத்திரம்" நடைமுறையில் வரும் தேதியைப் பின்போட வேண்டும், அல்லது

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் கல்யாணம் செய்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தான் நாங்க ஆசைப்படுறம்" என்றார்.

எனக்குப் பதில் சொல்ல முடியவில்லை. 'மாமா சொல்வதுபோல் வருபவர் இருப்பாரா?' என்று என்னுள் கேட்டுக்கொண்டேன். ஆனால் எனக்காகத் தன் உயிரைக்கூடக் கொடுக்கக்கூடிய மாமா, என்னை கூடாத ஒருவருக்கு மணம் முடித்து வைக்க ஒருநாளும் விரும்பமாட்டார் என்பது மட்டும் எனக்கு உறுதியாயிருந்தது. அதே நேரம் நானும் வசந்தியும் செய்துகொண்ட உறுதிமொழியும் என்னுள் ஒடியது. நான் பதில் எதுவும் பேசாமல் வெறுமனே இருந்தேன்.

மௌனம் சம்மதம் என்பதுபோல, "மனதைப் போட்டு யோசிக்காதேயம்மா. எல்லாம் உனக்கு நல்லதுக்குத்தான்" என்றபடி மாமா எழுந்து போய்விட்டார்.

அடுத்த நாளே எனக்கு வர இருப்பதாகச் சொன்னவரை நான் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அதன் பின்னரும் சுமார் இரண்டு வாரம் அளவில் அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கம் அவரைக் கண்டேன். நான் பார்த்ததுபோல என்னையும் அவர் பார்த்துக்கொண்டார். பார்த்தபோது என் மனதுக்குப் பிடித்தவராக நல்லவர் போலத்தான் எனக்குத் தென்பட்டது.

பிறகென்ன?...பேச்சுவார்த்தைகள் எவ்வித தடங்கலுமின்றி நடந்து முடிந்தன. பேச்சுவார்த்தைகள் நடந்த நான்காம் நாளே—அதாவது இன்றிலிருந்து முன்னே ஆறுவது நாள—திருமணப் பதிவும் கணையாழி மாற்றலும் நடைபெற்றன. அன்றிலிருந்து ஐந்து நாட்கள்—அதாவது நேற்றுவரை பகல் பொழுதைப் பெரும்பாலும் என் அருகிலிருந்து அன்போடு பேசுவதிலேயே கழித்தார் அத்தான். நான் மட்டும் என்னவாம்?...அவர் பேச்சைக் கேட்பதிலும் அவரோடு பேசுவதிலும் எனக்கு ஏற்பட்ட சுவை கற்கண்டுப் பாகில்கூட இருக்கமாட்டாது.

அப்பப்பா! கடந்த ஐந்து நாட்களும்தான் எவ்வளவு மகிழ்ச்சியாகக் கழிந்தன. ஆண்களைப்பற்றி நான் எண்ணியிருந்த எண்ணத்துக்கும் அத்தான் நடந்துகொண்ட விதத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! இளமைப் பருவத்தில் பல குடும்பங்களில் கண்ட அந்தக் கசப்பான அனுபவங்களைக்கொண்டு எல்லா ஆண்களுமே இப்படித்தான் இருப்பார்களாக்கும் என்று நான் கொண்டிருந்த தப்பெண்ணத்துக்காக நானே வெட்கப்பட்டுக் கொண்டேன்.

இந்த ஐந்து நாட்களிலும் தனது அன்பையெல்லாம் என்மேல் அள்ளிச் சொரிந்தேவிட்டார் அத்தான். அந்த அன்பு வெள்ளத்தில் நீந்திக் கரையேற முடியாமல் நான் தத்தளித்த தத்தளிப்பு இருக்கிறதே, அப்பப்பா!...அவரின் அந்த அன்பு வெள்ளத்தோடு எனது வெட்க வெள்ளமும் சேர்ந்து ஆரம்பத்தில் என்னைத் தவிக்கச் செய்துவிட்டன. ஆனால் தொடர்ந்து வந்த வேகம் கூடிய ஆசை வெள்ளம் வெட்க வெள்ளத்தை விரட்டியடித்துவிட்டது.

அன்போடும் ஆசையோடும் செல்லத்தோடும் அவர் பேசிய போதெல்லாம் நான் என்னையே மறந்தேன். ஒரு தடவை என்னை ஆசையோடு அணைத்துக் கன்னத்தோடு கன்னத்தை ஒட்டியபடி ஒரு கையால் என் தலையைக் கோதிவிட்டபடி இருந்தவர் மெதுவாக, "மணி..." என்றார்.

"ம்" என்றேன் நான்.

"என்மேல் உனக்கு நிறைய அன்பு தானே?" என்று கேட்டார்.

எனக்குப் பதில் சொல்ல ஒரே வெட்கமாயிருந்தது. கண்களை மூடிக்கொண்டேன்.

"பேசேன்!" என்றார் அவர் மீண்டும்.

"நிச்சயமாக அத்தான்..." வெட்கத்தை விட்டு வெகு சிரமப்பட்டுச் சொன்னேன் கண்கள் மூடியபடியே இருக்க.

"இப்படி என்னைப் பாரேன் மணி" என்றவர் என் நாடியைப் பிடித்து அவர் முகத்துக்கு நேரே என் முகத்தைத் திருப்பினார். நான் மெதுவாகக் கண்களைத் திறந்ததும், "இந்த அன்பு என்றும் மாறாமல் நிலைத்து இருக்குமல்லவா?..." என்று செல்லமாகக் கேட்டார்.

"அதை நீங்க கேட்டுத்தானா அத்தான் தெரிந்து கொள்ள வேணும்?...அதில் வேறு சந்தேகமா உங்களுக்கு?" என்றேன்.

தன் இரண்டு கைகளாலும் என் இரண்டு கன்னங்களையும் தாங்கியபடி, "அதற்கில்லை மணி, உன் வாயாலேயே அதைக் கேட்க எனக்கு ஆசையாக இருந்தது. அதுதான் கேட்டேன். என் அன்பும் உன்னைவிட்டு என்றும் நீங்காது. என்னை உன்னிடமே ஒப்படைத்துவிட்டேன்" என்றார் அன்போடு.

"அத்தான்!" என்றபடி அப்படியே அவர் மார்பில் சாய்ந்து கொண்டேன். அதில் தான் எத்தனை இன்பம்.

ஒருதடவை நான் படித்த புத்தகங்கள், கொப்பிகள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டுமென்று விரும்பினார் அத்தான். அவைகளை அவரிடம் காட்ட எனக்கு என்னவோ வெட்கமாக இருந்தது. ஏதோ இன்னொருவரிடம் அதைக் காட்டுவது போலவும், அவற்றிலுள்ள ஏதாவது பிழைகளைப் பார்த்து இவர் கேலி செய்வது போலவுமே எனக்குப் பட்டது. எனவே, "அதை நீங்க பார்க்க வேண்டாம் அத்தான்!" என்று கெஞ்சினேன் அவரை செல்லமாக வளர்ந்த என்னுடைய புத்தி அவ்வளவுதான்.

"ஏண்டி, அத்தான் பாக்கக் கேட்டாக் குடுக்கப்படாதா? இவ்வளவு நாளும் செல்லமா இருந்து புடிவாதம் புடிச்சா, இனியும் என்ன செல்லம்? இனி அத்தான் வேற, நீ வேறயா?... எல்லாத்தையும் எடுத்துக் குடு!" என்றார் அம்மம்மா.

"இல்லை பெத்தா, அதுக்கு ஏசாதீங்க. அதுக்கு வெட்கமாயிருக்குதாக்கும். அது விரும்பிற நேரம் தரட்டும்" என்றார் அத்தான்.

நான் சற்று நேரம் யோசித்த பிறகுதான் எனது புத்தியில்லாத்தனம் எனக்கு விளங்கியது. அத்தானும் நானும் ஒன்றுதானே? அவர் பழித்தாலும் என்னுடைய அத்தான்தானே?... ஐயையோ, எவ்வளவு தவறு செய்துவிட்டேன்?... என்று எண்ணிப் பார்த்தபோது மனம் மிகவும் வேதனைப்பட்டது. என் செய்கைக்காக வெட்கமும் பட்டேன்.

"மன்னிச்சுக் கொள்ளுங்க அத்தான். தெரியாத்தனமாக நடந்து கொண்டேன்" என்றபடி ஓடிப்போய் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து காட்டினேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தபோது எனக்கு நிறைய வெட்கமாகப் போய்விட்டது.

பாதி பார்த்துக் கொண்டிருக்கும் போதே என்னை ஆசையோடு அணைத்துக் கொண்ட அத்தான், "மணி, நீ ஒரு செல்லக் குழந்தைதான்" என்றார் கனிவோடு.

"உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று ஆசையோடு இருந்தாயாமே? அப்படி உத்தியோகம் பார்க்க விருப்பமா மணி?" என்று ஒரு தடவை கேட்டார்.

"இனி எனக்கு எதற்க அத்தான் உத்தியோகம்? உங்கள் அன்புக்கு முன்னால் உத்தியோகம் தூசிக்குக் கூடச் சமானமில்லை. உங்கள் எல்லையற்ற அன்பு ஒன்றே எனக்குப் போதும் அத்தான். அதுதான் இனி என் ஜீவநாடி" என்றேன். அவர் அப்படியே என்னைத் தழுவிக் கொண்டார். அவரின் அன்புக்கு இணை எதுவுமேயில்லை.

நேற்றுப் புறப்படும் சமயத்தில் அவரைப் பிரிய எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. அவர் மார்பில் சாய்ந்தபடி மெதுவாக விம்மினேன்.

"இதென்ன பைத்தியம் போல?...எனக்கு மட்டும் உன்னைப் பிரிவதில் இஷ்டமா?...ஆனால் என்ன செய்வது, கடமைக்கு நான் போக வேண்டாமா? போய் வரட்டுமா?" என்றார்.

நான் அவர் மார்பை விட்டு அசலவேயில்லை. கண்கள் என்னையறியாமலேயே மூடிக் கொண்டன. உதடுகள், 'எனக்குத் தெரியாது...' என்று முணுமுணுத்தன.

"அப்படிச் சொல்லாமல் 'போய் வாருங்க' என்று சொல்லு. என கண்ணல்லவா! போக நேரமாகிறதல்லவா?...சொல்லு!..." என்றார்.

என் மனதுக்கு விரோதமாகவே, "போய் வாருங்கள் அத்தான்" என்றேன் கண்ணீரை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

இன்று அந்தப் பிரிவை ஆற்றாமல் தத்தளிக்கிறேன். எங்கும் ஒரே சூனியம். இந்த நிலையில் வசந்தியின் கடிதம் எனக்குச் சிரிப்பைக் கொடுக்காமல் வேறு எதைக் கொடுக்கும்?

●

கூடதாசியை எடுத்து மளமளவென்று வசந்திக்குப் பதில் எழுதினேன். பதிலில் முழுவதையும் விவரமாக எழுதிய நான் இறுதியில், "வசந்தி! அன்பும் பண்பும் அறிவும் அழகும் உள்ள ஒரு கணவனின் முன்னால் படிப்பு; பட்டம்; பதவி எல்லாம் வெறும் தூசிக்குச் சமானமடி. நம் தெரிந்து கொண்ட சில கசப்பான அனுபவங்களைக் கொண்டு முழு உலகையுமே நாம் அளக்க முற்பட்டதும் ஆண்கள் எல்லோருமே அப்படித்தான் குடும்பம் நடத்துவார்கள் என்று எண்ணியதும் அதனால் மணம் செய்வதில்லையென்று உத்தியோகத்தை இலட்சியமாகக் கொண்டதும் பெரிய முட்டாள்தனம். என் அத்தானைப் போல் அன்பும் பண்பும் அறிவும் அழகும் உடைய உத்தமர்கள் ஆயிரம் ஆயிரமாக இருப்பார்கள் என்று நான் இன்று உறுதியாக நம்புகின்றேன். நமது தப்பெண்ணத்துக்காக வருந்துகின்றேன். அந்த வீண் இலட்சியத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டு, நீயும் என் அன்பு அத்தானைப் போன்ற உத்தமர் ஒருவரை மணந்து வாழ முற்படு. அதற்காக எனது பிரார்த்தனை" என்று முடித்தேன்.

கடிதத்தை உறையில் போட்டு ஒட்டும்போது, "மச்சி, மச்சி, தந்தி வந்திருக்கு..." என்று கத்திக் கொண்டே ஒரு தந்தியுடன் ஓடி வந்தாள் வனஜா.

சேமமாகப் போய்ச்சேர்ந்ததாகவும், கவலைப்படாமல் இருக்கும்படியும் அத்தான் தந்தியடித்திருந்தார். அப்படியே மார்புடன் அணைத்துக் கொண்டேன் தந்தியை. இதயத்திலே ஒரு பெரிய நிறைவு.

# கொங்கோவில் நடப்பது....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன! எந்தக் கட்சிக்கும் பூரண பெரும்பான்மையில்லை. 137 பிரதிநிதிகள்கொண்ட சபையில் ஆகக்கூடிய ஆசனங்களைக் கைப்பற்றிய லுமும்பாவின் தேசியக் கட்சிக்கு 35 ஸ்தானங்களே கிடைத்தன. லுமும்பாவின் செல்வாக்கை அதிகரிக்க வேறுவகையிலும் ஆதரவு இருந்தது. கிழக்குக் கொங்கோவின் மாகாண சபையில் லுமும்பா கட்சிக்குப் பூரண பெரும்பான்மை கிடைத்தது. அத்துடன் லேவு, காசாய் மாகாண சபைகளிலும் சாதாரண பெரும்பான்மை கிடைத்தது. எனவே, ஒப்பந்தத்தின் படி, மேற்சபை அங்கத்தவர் நியமனத்திலும் லுமும்பா கட்சிக்குப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தன. லுமும்பா அரசாங்கம் நிறுவும்படி கேட்கப்பட்டார்.

## பிரிவினைக் கோஷங்கள்

ஸ்திரமான பெரும்பான்மையில்லாததினால் மந்திரிசபை ஏற்படுவதில் குழப்ப நிலையிருந்தது. பதவிகள், போட்டிகள், குசுகுசுக் கூட்டங்களாக நிகழ்ந்தது கொங்கோ அரசியல், மூன்று வாரகாலமாக. லுமும்பாவினால் மந்திரிசபையமைக்க முடியாது போய் விட்டது என்று கூறி பெல்ஜியப் பிரதிநிதி, கஸவுபுவிடம் அப்பொறுப்பைக் கொடுத்தார். ஆனால் கூடிய ஸ்தானங்களைப் பெற்ற லுமும்பா கஸவுபுவின் மந்திரி சபையில் பதவியேற்க மறுத்துவிட்டார். பதவிப் போராட்டம் நீடித்தது. கடங்கா, காசாய், லியோப்போல்ட்வில் ஆகிய மாகாணங்கள் பிரிந்து தனியரசு கோருவோம் எனக்கிளர்ச்சி செய்தன. கஸவுபுவை ஜனாதிபதியாக நியமிக்க லுமும்பா ஒத்துக் கொண்ட சமரஸத்தினால், நிலைமை சீரடைந்தது. லுமும்பா பிரதமரானார்.

## பரிதாபம்

இறுதியில், சுதந்திர தினத்திற்கு 6 நாட்களுக்கு முன்னர், ஜூன் 24-ல் லுமும்பாவின் மந்திரிசபை பதவியேற்றது. அதில் 2? மந்திரிகளும் 1? காரியதரிசிகளும் இடம்பெற்றார்கள் இப்பதவிகளில அனேகமாக எல்லாக் கட்சிகளிலுமுள்ளவர்களுக்கும் பங்கு கிடைத்தது. சாந்தி மீண்டுவிட்டது போல் தோன்றிற்று.

அரசியற்றுறை இவ்வாறு ஒரே குளறுபடியாயிருந்த பொழுதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. கொங்கோலிய இராணுவத்தில் கலகம் பிறந்தது!

['கொங்கோ' பற்றிப் பிரசுரமா[illegible] பகுதி இது. இத் தொடரில் மேலும் [illegible] —ஆசிரியர்.]

# தலை கொடுத்தான் தம்பி

நாட்டின் இளவரசியான தன்தாயைக் கெடுத்து அவள் வாழ்வை அழித்த தன் தந்தையையும் அவன் ஏற்கனவே திருமணம் செய்த பெண்ணையும் மைந்தனையும் ஒழித்துக் கட்டுவேன் என்று வீர சபதம் செய்து புறப்படுகிறான் இந்திரஜித்.

தந்தையின் கட்டளையைக் கேட்டு சிற்றன்னையையும், தம்பியையும் கான மறு திசையிலிருந்து கிளம்புகிறான் இன்பசாகரன்.

இருவரும் திசைமாறிப் போகின்றனர் தந்தையை கொலை செய்யவந்த இந்திரஜித்பாசத்தால் செயலிழந்து போகிறான். ஆனால் அவன் இதயத்தில் கொண்ட வெறி தணியவில்லை. தன் தந்தையின் முந்திய தாரத்திறகு பிறந்த இன்பசாகரனை ஒழித்துக்கட்ட புறப்படுகிறான். இன்பசாகரன் அரசனாகி விடுகிறன். அரசனைக் கொலை செய்ய முயன்ற

## சினிமா விமர்சனம்

குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெறுகிறான் இந்திரஜித் சதிகாரர்களால் முடியிழந்த இன்பசாகரனும் இந்திரஜித் சிறைதண்டனை அனுபவிக்கும் சிறைக்கே அனுப்பப்படுகிறான். அந்த ஒருவரையொருவர் யாரென்று தெரியாமலே அன்பை அள்ளிச் சொரிகின்றனர்.

இன்பசாகரனை அறிக்கதும் இந்திரஜித் அவனை ஒழித்துக்கட்ட முனைகின்றான். ஆனால்...... அவனின் இரத்தபாசம்... தடுக்கிடுகிறது. தன் அண்ணனைக் காப்பாற்ற—அரசுரிமையை அவனுக்கே நிரந்தரமாக்க தன் உயிரையே பணயம் வைக்கிறான். தலை கொடுக்கிறான் தம்பி இந்திரஜித்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் கொதிக்கும் எரிமலையாக கோபமான கட்டங்களிலும், குளிரும் தண்மதியாக அன்பு நிறைந்த கட்டங்களிலும் நடிக்கிறார்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி இன்பசாகரனாகதோன்றி தமக்கே உரித்தான பாணியில் நடிக்கிறார்.

சபாஸ் மீனா புகழ் மாலினி கதாநாயகி பூங்கொடியாக நடிக்கிறார்.

எஸ். மனோகர் தாம்பரம் லலிதா இருவருக்கும் படத்தில் அதிகம் இடமில்லையாயினும் தமது பாத்திரங்களை நன்குணர்ந்து நடித்திருக்கின்றனர்.

குலதெய்வம் ராஜகோபால், டி. பி. முத்துலெட்சுமி ஆகியோரின் நகைச்சுவை கட்டங்களும் இருக்கின்றன.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கருத்து நிறைந்த பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

கதை வசனம் முரசொலி மாறன் எம். ஏ. இது ஒரு இராஜா ராணிப் படம். பொறுமையோடிருந்து பார்க்க வேண்டிய பொழுது போக்குக்கு உகந்த படம். சகோதர பாசத்தை உணர்த்தும் கதை.

அனல் கக்கும் மலைக் குகையினுள்ளே அண்ணனும் தம்பியும் பிணைத்த சங்கிலியுடன் நுழைவதும், ஆற்று வெள்ளத்தில் தெப்பத்தில் தப்பிச் செல்வதும் போன்ற காட்சிகள் மயிர்க்கூச்செறியும் வண்ணம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் தியேட்டர்களில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது 'தலை கொடுத்தான் தம்பி'.

—இராக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் தம்பி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருசுகும் ஆங்கில இலக்கிய விஷயத்தைத் தமிழில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுவதுமுண்டு. பொருட் சுவையானால் எளிதாகச் சொல்லி விடுவார். சொற் சுவையானால் சொல்ல முடியாது "உனக்கு விளங்காது" என்று சொன்னாலும் கோபம் வரும். ஆங்கிலம் தெரியாதவரோடு இது பற்றி என்ன பேச்சு என்றோ விவேகம் குறைவு என்றோ சொல்வதாக நினைக்க முடியாதபடி ஏதேதோ சொல்லி ஆங்கில இலக்கியச் சொற்சுவையைத் தமிழில் சொல்ல முடியாது என்பதைப் புரிய வைத்து விடுவார். இப்படி இரண்டொரு முறை திண்டாடிய பிறகு "இது சொல்லை வைத்துக் கொண்டு புலவர் செய்யும் வித்தை தமிழில் சொல்ல முடியாது" என்றால் தாயார் சரி என்று விட்டு விடுவார்.

இப்படியாக ஆங்கில தமிழ்க் கவிஞர்கள் அறிஞர்கள் சான்றோர்களின் வாக்குகள் தினம் பலமுறை செவியிலும் நாவிலும் பழகி அவர்களின் உயர்ந்த கருத்துக்கள் ஊறப் பெற்ற மனம் உயர்ந்த பண்பாடு உடையதாக விளங்கியதில் வியப்பு இல்லையல்லவா?

### தாயாரின் சேவை

தாயாருக்கும் மாமன்மார் இருவருக்கும் — துறவியான மூத்த மாமனுருக்கும் கூட—நல்ல உலகியல் ஞானம் உண்டு. சகப்பனரைப் "புத்தகப் பூச்சி" என்பார்கள். வீட்டினுள் இருந்து கொண்டே உலகியல் விவகாரங்கள் அனைத்தும் அறிந்து வைத்திருப்பார் தாயார். உலகியல் விவகாரங்களை அவதானியாமலே வெளியில் உலவி வருவார் தந்தையார். தாயாரது உலகியல் ஞானத்தைத் தம் தொழில் முறையில் தந்தையார் பல முறை பயன் படுத்தியதுண்டு. தந்தையாருக்குத் தம் கலையுலகை விட்டு வெளிவருவதில் சிறிதும் விருப்பமே இல்லை. நியாயவாதத் தொழிலும் அவருக்கு ஒரு கலையே. சில்லறை உலகியல் விவகாரங்களில் அவருக்கு மனம் செல்வதில்லை. தொல்லைதரும் குடும்ப விவகாரம் எதுவாயிருந்தாலும் —கரூர் கண்டிப்பு அவசியமான கொடுக்கல் வாங்கலாயிருந்தாலுஞ் சரி, குழந்தைகளைக் கண்டித்துத் திருத்துவதாயிருந்தாலும் சரி—வீட்டிலிருந்தே சமாளிக்கக் கூடியதானால் அதைத் தாயாரிடம் தள்ளி விடுவார். வீட்டிலிருந்தபடியே தாயார் பார்த்துக் கொள்ள முடியாத விவகாரங்களை மட்டும் விதியே என்று போய்க் கவனிப்பார். கண்ணோட்டம் மிகுந்தவரான அவருக்குத் தம்முடன் பழகியவர்கள் சொல்வதை —அவர்கள் கேட்பதை மறுத்துப் பேசுவதென்றால் —மனதுக்கு வேதனையாக இருக்கும். அப்படிச் செய்ய மனம் ஏவாது. அதனால் குடும்பநலம் பாதிக்கப்படும் என்று தெரிந்தால், மற்றவருடன் வாயாடி வாதாடிக் குடும்ப நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பைத் தாயாரிடமே சுமத்தி விட்டுத் தாம் ஒதுங்கி நின்று கொள்வார்.

தாயாரது உலகியல் ஞானமும் தந்தையாரது கலையியல் ஞானமும் ஒன்றையொன்று பூரணமாக்கும் வகையில் வன்னியசிங்கத்துக்குக் கிடைத்திருந்தன. உலகியல் ஞானம் கலையுணர்வின் சார்பால் முதிர்ந்து கனிந்து மேதாவிலாசமாகப் பரிணமித்ததைக் கண்ணோட்டம் பலர்க்கும் தக்க முறையில் பயன்படச் செய்தது. பயன்மரம் உளூர்ப் பழுத்தனைய ராய் விளங்கினார் வன்னியசிங்கம். (தொடரும்)

# இது என் நாடு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பிரச்சினை வந்ததும், தாவிக் குதிக்கிறார்கள். தாறுமாறுகக்கூட நடந்து கொள்கிறார்கள்.

அசாமிலே, இன்னமும் அடங்கவில்லை அமளி.

பஞ்சாபிலே கிளர்ச்சி ஓயவில்லை.

மகாராஷ்டிரம் கிடைத்த பிறகுதான், பம்பாய் ஆமதாபாத அமளி அடங்கிற்று.

'நாக நாடு' என்று தனி அந்தஸ்துத் தருகிறோம், ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய், செலவுக்குத் தருகிறோம், இந்தியாவில ஒரு பகுதி என்ற ஏற்பாட்டுக்காகிலும் இணங்குக, என்று முகவாயக் கட்டையைப் பிடித்துக்கொண்டு, கெஞ்சுகிறது. பார்க்கிறோம்.

இவர்களேதான், 'திராவிடம்' என்று நாம் பேசும் போது, சேச்சே! என்ன பேதமை! பாரத தேசம் என்று சொல்லுங்கள்!— என்று உபதேசம் பேசுகிறார்கள்—உணவு விடுதியிலே, கண்டோமே, உலகநாதன், அவனைப்போல.

நமக்கு வேண்டிய உரிமையின் அருமையை, மற்றவர்கள், புரிந்துகொள்வார்கள், அக்கரை காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பதும் தவறுதானே!

நமக்குத்தானே, பிரச்சினை புரிய முடியும். நாம்தான், கேட்டுக்கொள்ளவேண்டும்.

இன்னொருவர் தயவெதற்கு?

இந்நாட்டில் வாழ்வதற்கு! என்ற கேள்வியை.

### மாணவர் கடமை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனத்தார்கள் தங்களுடைய வேலையாட்கள் ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன் நன்கு சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலாற்றுமையினால்; வீணான பொருட் செலவும்; நேரப் போக்கும் தங்களுக்கு உண்டாகிறதென்று முறையிடுகிறார்கள்.

(அடுத்த வாரம் முடியும்)

# எல்லாம் தமிழியக்க வாரம்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது மனவருத்தமாகத்தான் இருக்கின்றது

### 'எல்லாம் தமிழில்' இயக்கம்

வன்னியசிங்கம் அவர்கள் மறைவதற்கு முன்னர், கடைசியாக ஆரம்பித்த இயக்கம் 'எல்லாம் தமிழ்' இயக்கமாகும். அரசாங்கம் தமிழிலே எழுதப்படும் கடிதங்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்காத காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது அந்த இயக்கம். ஆனால் இன்று தமிழிலே எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழிலேயே உடனுக்குடன் பதில் எழுதப்பட வேண்டும் என அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ள இந்த நேரத்தில், தமிழ் மக்கள் தமிழ் மொழியிலே கடிதங்கள் எழுதுகிறார்கள் இல்லை என அரசாங்கப் பகுதிகளே அங்கலாய்க்கும் செய்தியைப் பத்திரிகைகளில் படிக்கும் நாம் நிச்சயமாகப் பெருமைப்பட முடியாது.


### சபதம் செய்யுங்கள்

ஆகவே, வன்னியசிங்கம் அவர்கள்மீது உங்களுக்கு உண்மையிலேயே பற்றும் பாசமும் இருக்குமேயானால், வன்னியசிங்கம் அவர்கள் செய்த தியாகத்துக்கு நீங்கள் சிறிதளவேனும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுவீர்களேயானால் தமிழ் பேசும் மக்களே! அவர் அமரத்துவம் அடைந்த இத் தினத்திலிருந்தாவது "நாங்கள் அரசாங்கத்துடன் சகலவிதமான கடிதத் தொடர்புகளையும் தமிழ் மொழிமூலமாகவே ஏற்படுத்துவோம்" எனச் சபதம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று வன்னியசிங்கம் அவர்களின் பேரால் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விதம் சபதம் எடுத்துக்கொண்டதற்கு அடையாளமாக, அக்டோபர் மாதம் 13ம் தேதி வரவிருக்கும் அவரது பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு வார காலத்தினை 'எல்லாம் தமிழ் இயக்க' வாரமாகக் கொண்டாடுங்கள் என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

வன்னியசிங்கம் அவர்கள் எங்களை விட்டு மறைந்து போனாலும் அவர் வளர்த்த கொள்கைகள், இலட்சியங்கள் எங்களை விட்டுப் போகவில்லை.


வெற்றிகரமான 5-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச் சுவைப் படம்.

விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.

அஞ்சலிதேவியின் அற்புதமான நடனங்களும், காதுக்கினிய பாடல்களும் நிறைந்த படம்.

நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்,
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த

அஞ்சலி பிக்சர்ஸ்

அடுத்த வீட்டுப் பெண்

இசை—தயாரிப்பு: ஆதிநாராயணராவ் ★ டைரக்ஷன்: வேதாந்தம் ராகவையா

பின்னணி-
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், ராகவன், எஸ். சி. கிருஷ்ணன், பி. சுசீலா, ஜானகி, டி. வி. இரத்தினம்.

குதூகலமான 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] — ரெக்ஸி [வெள்ளவத்தை] — வின்சர் [யாழ்ப்பாணம்] — வேல்ஸ் [கண்டி]

இம்பீரியல் [மட்டக்களப்பு] — நெல்சன் [திருகோணமலை] — கிங்ஸ் [பதுளை] — அசோகமாலா [நீர்கொழும்பு]

3 மணித்தியாலத் திடுக்கிடும் சம்பவங்கள்,
பொறி பறக்கும் வாள் சன்டைகள்,
இவற்றினிடையே
—சுடர் வீசும் தாரகைகள்.
சிவாஜி கணேசன், வைஜயந்திமாலா,
பத்மினி, பானுமதி, பண்டரிபாய், நம்பியார்,
பாலையா, இ. வி. சரோஜா, ஸ்டன்ட் சோமு
முதலியோர் நடித்த

ராஜபக்தி



எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—கண்ணாம்பா நடிக்கும்

படிக்காத மேதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தானந்தர்

இவர் இந்தியாவுள்ள சிவகங்கையை அடுத்த பளையூரில் 1897-ல் பிறந்தார். இவரின் இளமைப் பெயர் வேங்கட சுப்பிரமணியன். செல்லையா என்றும் இவரை அழைப்பதுண்டு. ஓர் இஸ்லாமியப் பெரியாரே இவருக்குச் சுத்தானந்தர் என்னும் பெயரைச் சூட்டினூர்.

இவர் இளமையிலேயே இல்லறத்தை விட்டுத் திருக்குறளின்படி உண்மைத் துறவறத்தை மேற்கொண்டார். இவர் பழங்காலத் துறவிகள்போல் மக்களை வெறுத்து — நாட்டைவிட்டுக் காடு சென்று பயனற்ற வாழ்வு வாழ்பவரல்ல. இவர் ஒரு விநோதமான துறவி — புதுமைச் சந்நியாசி — நற்பணி புரியும் ல்ல பிரமச்சாரி.

இவர் மக்களோடு வாழும் துறவி. பிறந்த நாட்டைப் போற்றும் முனிவர். எல்லாவற்றையும்துறந்தும்தமிழ்ப் பற்றைத் துறக்க முடியாத பெரியார். இவரின் அறுபதாண்டு விழாவையும் தமிழ் நாட்டில் கொண்டாடி விட்டனர்.

இவர் 22 ஆண்டுகளுக்கு மேல் மௌன விரதம் இருந்து நூற்றுக்கணக்கான நூல்களை எழுதிக் குவித்துள்ளார். சில அச்சேறியும் பல அச்சேருமலுமுள்ளன.

இவர் ருஷ்யா, ஜப்பான், மலேயா, இலங்கைபோன்ற பல தேசங்களையும் சுற்றிப் பார்த்துள்ளார். இவரின் "பராசக்தி மகா காவியம்" என்னும் நூல் ஒன்றே இவரின் பரந்த தமிழறிவைப் புலப்படுத்தும். இவர் எல்லாராலும்போற்றப்படுவர். இவருக்கு எம்மதமும் சம்மதமே. எல்லோரும் சோதரரே!

இவர் நற்பணி புரியும் உண்மைத் துறவி. பல மொழி பயின்ற பெரும் அறிவாளி. சிறந்த செந்தமிழ்க் கவிஞன். நல்ல எழுத்தாளி. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பொது நோக்குடையவர். இவர் நெடுநாள் வாழ்ந்து நற்பணி புரிக. வாழ்க சுத்தானந்தர்!

—"தாமரைத்திவான்"




# மாணவர் கடமை

— ஏ. கே. செல்லத்துரை—

மாணவர்களாயிருக்கும் பொழுதுதான் அறிவை வளர்த்துக் கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உங்கள் முதியோர்களைத் துன்புறுத்தும் கவலைகள் அனைத்திலிருந்தும் நீங்கள் விலக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய மனம் தூய்மையாகவும்; உங்களுடைய ஞாபகசக்தி நல்லாகவும் இருக்கும் காலம் இது. உங்களுக்கு ஓய்வு நேரம் தாராளமாய்க் கிடைக்கிறது. மனக் குழப்பத்திற்கு இடமில்லை. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உங்களுடைய வருங்கால வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் போதிய அளவு பெற்றுக்கொள்வதற்கு முனைதல் வேண்டும். உங்களுடைய வாழ்க்கையின் அந்தஸ்தை உயர்த்தக் கூடியதும் நல் ஒழுக்கத்தை அமைக்கக் கூடியதுமான நல்ல புத்தகங்களை வாசித்தல் வேண்டும். வாழ்க்கைக்கு உதவாத பொருள்கள் அடங்கியுள்ள புத்தகங்கள், காதல் கதைகள், ஆசையைத் தூண்டுவிக்கும் புத்தகங்கள், கொலை களவு முதலியவைகளைப் போதிக்கும் புத்தகங்கள் முதலியவைகளை வாசித்தல் கூடாது. சினிமாத் திரைகளில் காட்டப்படும் ஆபாசமான படங்களைப் பார்த்தல், சுருட்டுச் சிகரட் புகைத்தல் முதலியவைகளையும் முக்கியமாக விலக்கிக் கொள்ளல் வேண்டும்.

கல்வியின் தரம் படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகிறதென்பதை நீங்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள். இதை நீங்கள் உங்களால் இயன்றவரை தடை செய்யலாம். கல்வியின் வீழ்ச்சி முழுவதும் பள்ளிக்கூடங்களில் உள்ள குறைகளினுல்தான் ஏற்படுகின்றன என்பதல்ல. மாணவர்களாகிய உங்களுடைய குறைகளும் அதில் இருக்கவே தான் செய்கிறது. இந்தக் குறைகள்; உங்களிடத்தில் ஏற்பட்டுள்ள ஊக்கமின்மையேதான் பெரும்பாலும் காரணமாயிருக்கலாம். நீங்கள் எதைச் செய்தாலும்; விடாமுயற்சியுடன்; உங்களால் இயன்றளவு திறமையாகச் செய்ய வேண்டும் என்பதே உங்களுடைய குறிக்கோளாக அமைய வேண்டும். எப்பொழுதாகுதல் நீங்கள் அஜாக்கிரதையாக இருந்து விடாது உங்களுடைய வேலையிலே நீங்கள் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

நீங்கள் திறமை உடையவர்களாகத் தோன்றுவதற்குக் கவனிக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள்:—

**உங்களுடைய கையெழுத்து:**

ஒரு நல்ல துலக்கமான கையெழுத்து எழுதுவதற்கு உங்களுக்குச் சாமர்த்தியம் வேண்டியதில்லை. எங்களுடைய பள்ளிக்கூடக் காலங்களில் நாங்கள் அச்சுக் கொப்பிகளில் உள்ள எழுத்துக்களைப் பார்த்து எழுத வேண்டியிருந்தது. நாங்கள் வடிவான துலக்கமுள்ள அச்சு எழுத்துக்களைப் போன்ற எழுத்துக்களை எழுதாது போனுல்; வெட்கப்பட வேண்டியவர்களாயிருந்தோம். உங்களில் எத்தனை பேர் வடிவாகவும் தெளிவாகவும் எழுதக்கூடியவர்கள்? சிறிது காலத்தின் பின் உங்களுடைய கையெழுத்தை நீங்களே வாசிக்க முடியாதவர்களாயிருக்கிறீர்கள். பரீட்சை வினைத்தாள்களில் கூடாத கையெழுத்துக்கும்; கவனையீனத்திற்கும் புள்ளிகள் குறைக்கப்படும் என்று மாணவர்களை எச்சரிக்கை செய்வது பொது நடையாகி விட்டது. இதற்கு இடம் கொடுக்காது நீங்களே உங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

**கையெழுத்தைப் பற்றிக் காந்திஜீயின் அபிப்பிராயம்:**

"கையெழுத்து நன்ருயிருக்க வேண்டும் என்பது படிப்பில் ஒரு பகுதியல்ல என்ற கருத்து எனக்கு எங்கிருந்து உண்டாயிற்று என்று தெரியவில்லை. நான் இங்கிலாந்துக்குப் போகும் வரையில் இந்த அபிப்பிராயமே எனக்கு இருந்தது. பிறகு; முக்கியமாகத் தென்னுபிரிக்காவில்; இளம் வக்கீல்களும்; தென்னுபிரிக்காவில் பிறந்து; அங்கேயே படித்த இளைஞர்களும் மிக அழகாக எழுதுவதைக் கண்ட போது என்னைக் குறித்து நானே வெட்கப்பட்டதோடு ஆரம்பத்தில் அசிரத்தையுடன் இருந்து விட்டதற்காக வருந்தவும் செய்தேன். மோசமான கையெழுத்தை அரைகுறையான படிப்புக்கு அறிகுறியாகக் கொள்ள வேண்டும் என்று கருதினேன். கையெழுத்து நன்ருக இருக்கும்படி செய்யப் பிறகு முயன்றேன். ஆனுல் அதற்குக் காலம் கடந்து போய்விட்டது. இளமையில் அசட்டையாக இருந்து விட்டதனுல் ஏற்பட்ட தீமையைப் பிறகு என்றுமே நிவர்த்தி செய்து கொள்ள இயலவில்லை. ஒவ்வோர் இளைஞரும்; இளம் பெண்ணும் என்னுடைய உதாரணத்தைக் கண்டாவது எச்சரிக்கையுடன் இருக்கட்டும்; கையெழுத்து நன்ருகவிருக்க வேண்டும் என்பதும் படிப்பின் ஒரு பகுதியென்பதை அறியட்டும். குழந்தைகளுக்கு எழுத்துக்களை எழுதுவதற்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னுல் சித்திரம் வரையக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று இப்பொழுது கருதுகிறேன். பூக்கள்; பறவைகள் போன்றவைகளைக் குழந்தை பார்த்தே தெரிந்து கொள்வதைப் போல, எழுத்துக்களையும் அது பார்த்தே தெரிந்து கொள்ளட்டும். பொருள்களைப் பார்த்து அவற்றை வரையக் கற்றுக்கொண்ட பிறகு எழுத்துக்களை எழுதக் கற்கட்டும். அப்பொழுது அக்குழந்தையின் கையெழுத்து அழகாக அமையும்" என்று காந்திஜீ கூறியுள்ளார்.

**முன்னுல் திட்டமிட்டுக் கொள்ளல்:**

ஒரு வீட்டைக் கட்டுவதற்கு ஒரு திட்டப் படம் வேண்டும். அந்தப்படத்தில் தான் அந்த வீட்டுக்கு எத்தனை அறைகள், எத்தனை கதவுகள்; எத்தனை ஜன்னல்கள்; எத்தனை விருந்தைகள் என்று வரையறுக்கப் பட்டிருக்கும். அந்தப் படத்தைப் பார்த்துத்தான் வீடு கட்டுவதற்கு ஆரம்பிப்பார்கள் இதே போன்று மாணவர்களாகிய நீங்களும் உங்களுடைய பாடத்திட்டங்களை முன்கூட்டியே யோசித்து அதற்கான ஆயத்தங்கள் செய்து கொள்ளாது எதையும் செய்ய முடியாது. அனேக மாணவர்கள் பரீட்சைகளில் சில கேள்விகளுக்குப் பதில் அளிக்காது விட்டு விடுகிருர்கள். காரணம் நேரம் போதாது என்று கூறுகிருர்கள். இந்தக் குறையை எப்படி நிவர்த்தி செய்து கொள்வது? மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் நேரத்தை வரையறுத்து திட்டமிட்டுப் பதில் அளிக்க வேண்டும். பரீட்சைகளில் மாணவர்கள் அளிக்கும் பதில்கள் சில நீண்டதாயும் சில குறுகியதாயும் இருக்கின்றன. காரணம் திட்டமின்மையே. வருடக்கணக்காக வளர்ந்து வந்த இந்தக் குறைவினுல் பல தொழில்

(13-ம் பக்கம் பார்க்க)

## "தமிழரசுக்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படாதவாறு ஏதும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். நீண்ட காலப் பரிகாரம் எதுவும் காண வேண்டின், அரசாங்கம் தமிழரசுத் தலைவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நிகழ்த்த வேண்டியதே. இவ்வாறு தமிழ்த் தலைவர்களை அழைத்துப் பேசுவதில் பிரதமர் எவ்வித தயக்கமும் காண்பிக்கக் கூடாது.

## காங்கேசன்துறை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அகங்கமாவிலுள்ள மக்களுக்குத் தேவையான அரிசி காலித்துறையில் இறக்கக் கூடியதாயிருக்கும் பொழுது கொழும்பில் மனிங் ஸ்ரோவிலிருந்து ஏன் காலிக்கு மீண்டும் (திருப்பி) அனுப்பப்பட வேண்டும்?

ஃ

(பின்னர் கிடைத்த செய்தியின்படி காலித் துறைமுக அபிவிருத்திக்கு 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.)

16—9—60

# அன்பின் ஆற்றலை உணர்த்திய சம்பவம்

மகாத்மா காந்தி பதினைந்து வயது வாலிபனுக இருந்த நாட்களில் அவரது சிறிய தமையன் தன் கையில் தங்கக் காப்பு அணிந்திருந்தார். காந்தி தன் தமையனை அறியாது கெட்டித் தங்கத்தாலான அக்காப்பிலிருந்து ஒரு துண்டைவெட்டி எடுத்து விட்டார். அதைக் கொண்டு தமையன் வாங்கியிருந்த இருபத்தைந்து ரூபா கடனைக் கொடுத்து தீர்த்தார். என்ருலும் அவர் செய்த குற்றம் அவரை மிகவும் வருத்தியது.

தான் செய்த குற்றத்திற்குப் பரிகாரம் தேடினலன்றி நிம்மதி பெற இயலாதென காந்திக்குத் தோன்றியது.



காந்திஜீ

எனவே, இனிமேல் ஒருபோதும் திருடுவதில்லை என்று திடசங்கற்பம் கொண்டார். அத்தோடு தன் தந்தையாரிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோருவதென்றும் முடிவு செய்தார்.

காந்தியின் தந்தையார் மக்களை அடித்துத் திருத்தவில்லை. அதனுல், நடந்தவற்றை அறிந்தால் தந்தை அடிப்பார் என்ற பயம் காந்திக்குச் சிறிதும் இல்லை. என்ருலும் தன் செயலை அறிந்தால் அதற்காகத் தந்தை துயர்கொள்வாரே என்று வருந்திஞர். அதனுல்தந்தையிடம் அதை நேரில் கூறுவதற்குப் போதிய துணிவு ஏற்படவில்லை.

ஈற்றில்ஒருவாறு துணிந்து, ஒரு கடிதம் எழுதித் தன் தந்தைக்கு நேரிலேயே கொடுத்தார். அக் கடிதத்தில் நடந்த சம்பவத்தை விவரித்து, அதற்கு மன்னிப்புக்கோரியதோடு இனிமேல் திருடுவதில்லை என்றும் வாக்களித்திருந்தார்.

காந்தியின் கடிதத்தைப் படிக்கும்போது அவர் தந்தையின் கண்கள் முத்து முத்தாகக் கண்ணீரைச் சொரிந்தன. காந்தியும் தந்தையின் மனவேதனையை உணர்ந்து சிறு குழந்தையைப் போல் அழுதார். தந்தையின் அன்புக் கண்ணீர் காந்தியின் பாவங்களைக் கழுவி இருதயத்தைத் தூய்மையாக்கியது.

மேற்கூறிய சம்பவத்தால் காந்தி அன்பை அனுபவித்து அதன் இயல்பை உணர்ந்தார். அன்பின் ஆற்றல் அளவிடற்பாலது என்பதை அந்த நிகழ்ச்சி அவருக்கு உணர்த்தியது. அதனுல் அடிமைத் தளையைத் தகர்த்தெறியும் ஆயுதமாக அன்பைப் பயன்படுத்திப் போராடிஞர். அவருடைய அன்புப் போராட்டத்தின் முன் வெள்ளையனின் படைகள் சிதறிச் சின்னுபின்னமாகின. பாரதத்தில் அடிமை வாழ்வு ஒழிந்து எங்கும் விடுதலைக் கீதம் ஒலித்தது.

—அன்ரனி பெர்னுண்டோ

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2

பெயர் ....................................................

பாடசாலை ..............................................

விலாசம் ..................................................

...................................................

..............................  ..............................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்  கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### கலைமகள் படிப்பகம் பசறை

பசறைத் தமிழ்ச் சங்கமென விளங்கும் கலைமகள் படிப்பகத்தின் ஓராண்டு நிறைவு விழா 17-9-60 சனிக்கிழமை சீத்தாராம் படமாளிகையில் படிப்பகப் பாதுகாவலர் திரு. வி. பி. வீரப்பத்தேவர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கத் தலைவர் திரு. தமிழோவியன் வரவேற்புரை நிகழ்த்தத் திரு. ஐ. சாரங்கபாணி ஆசிரியரின் தலைமையில் ஆரம்பமாகியது.

தமிழ் வணக்கத்துடன் ஆரம்பித்த காலை நிகழ்ச்சிகளில் காலம் சென்ற, தமிழரசுத்தலைவர் திரு. வன்னியசிங்கம், திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா ஆகியவர்களுக்கு இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. வே. சுப்பையா இன்னிசை விருந்தளித்தார். திரு. அ. தங்கராசன் "நான் கண்ட பாரதி" என்ற தலைப்பில் பேசுகையில் எல்லார் கொள்கைக்கும் ஏற்றவர் பாரதி என்று விளக்கினார். நகைச்சுவைக் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் வயிறு குலுங்கச் சபையோரைச் சிரிக்க வைத்தார். "வாழ்வு தந்த இலக்கியம்" என்ற தலைப்பில் வித்துவான் கமலநாதன் பேசுகையில் சங்க காலத் தமிழர் வீரம் தமிழரைத் தமிழர் சாய்ப்பதிலேயே தங்கியிருந்ததென்பதற்குப் புறநானூறு தக்க சான்று, இதற்கு விதிவிலக்கான சிலப்பதிகாரம் தமிழர் எல்லை கடந்து சென்று ஈட்டிய வெற்றிகளை எடுத்துக்காட்டுகிறது. இப்படி வாழ்விலிருந்து உருவாகும் இலக்கியம் பின் வாழ்க்கைக்கே வழி காட்டி நிற்கிறது. என்று விளக்கினார்.

பிற்பகல் நிகழ்ச்சியில் திரு. பொ. செல்வநாயகம் ஆசிரியர் தலைமையில் திருமதி. பவளமலர் சங்கர் "சிலப்பதிகாரம்" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துகையில் சிலப்பதிகாரம் சித்தரிக்கும் பெண்கள் பண்பை விளக்கினார். செல்வன் வ. இராஜேஸ்வரன் நடனமாடி சபையோரை மகிழச் செய்தார். அதையடுத்து "மறுமணம்" என்ற நாடகம் படிப்பக உறுப்பினர்களால் திறம்பட நடித்துக் காட்டப்பட்டது. திரு. கு. குமாரசாமி நன்றியுரை கூறினார்.

---

### பகுத்தறிவு இயக்க கொக்குவில் கிளை

அகில இலங்கை பகுத்தறிவு இயக்க கொக்குவில் கிளையின் ஆதரவில் கடந்த 11-9-60-ல் அமரகவி பாரதியின் விழா கொக்குவில் சன சமூக படிப்பகத்தில் திரு. க. சிவகாருணியம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் உரைக்குப்பின் இயக்க உறுப்பினர்களாகிய செல்வன் சி. பொ. தருமராசா "பாரதியும் வள்ளுவரும்" என்னும் தலைப்பிலும், செல்வன் ச. யோகேந்திரன் "பாரதி இன்று இருந்தால்" என்னும் தலைப்பிலும் செல்வன் தி. அரியபுத்திரன் "புதுமைக் கவிஞன் பாரதி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

---

### தெமோதர இ. தி. மு. க. கிளை

தெமோதர இ. தி. மு. க. கிளையின் நிருவாகிகள் தெரிவுக் கூட்டம் கடந்த 13-9-60-ல் மத்திய கழக நிர்வாகி திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு ஓதம்பை, எல்லை ஆகிய தோட்டங்களிலிருந்தும் தொழிலாளத் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

தலைவரின் நீண்ட விளக்கத்துக்கு பிறகு தெமோதரை தோட்டக் கிளை நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. விவரம் பின் வருமாறு:—

செயலாளர்: வி. தட்சணாமூர்த்தி, துணைச் செயலாளர்: எம். வீரையா, பொருளாளர்: எஸ். குமாரவேல். செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஏ. மாரிமுத்து, கே. சின்னையா, கே. ராதாகிருஷ்ணன், எம். மருதப்பன், ஆர். பி. ரங்கராஜா, எம். கிருட்டினன், எஸ். கார்மேகம் ஆர். சண்முகம், கே. கருப்பையா, கே. அடைக்கலம், ஏ. எஸ். கந்தையா, ஆர். விரப்பன். பொதுக்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் ஆர். பி. ரங்கராஜா, எம். கிருட்டினன்.

---

### நுவரெலியா மாவட்ட இ. தி. மு. க. கிளை

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக நுவரெலியா மாவட்டக் கழக கூட்டம் கடந்த 9-9-60-ல் தீவெளி தியேட்டருக்கருகில் தற்காலிக செயலாளர் திரு. ராமநாதன் தலைமையில் கூடியது.

இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியனும் கழகப் பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர். திரு. ராமநாதன் பொதுச் செயலாளரை வரவேற்றுப்பேசினார். தோழர் மணியம், கிருட்டிணன் ஆகியோரும் பேசினர். இறுதியில் பொதுச் செயலாளர் திரு. இளஞ்செழியன் இ. தி. மு. க. வின் தற்போதைய நிலைமையை விளக்கி நீண்ட நேரம் பேசினார்.

---

### மாபோலையில் மீலாத் விழா

"அகிலங்களுக்கோர் அருட்கொடை" யாக அவனியில் அவதரித்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவதார நன்னாளை அகிலமே கொண்டாடும் வேளையிலே மாபோலை மீலாத் ஷரீப் மஜ்லிஸ்ஸாரால் மாபோலை ஜும்ஆ பள்ளிவாயலில் கடந்த 8-9-60-ல் இரவில் மௌலித் ஓதப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. மறுநாள் மாபோலை அரசினர் முஸ்லிம் பாடசாலையின் முன்றலில் மேற்படி பாடசாலை மாணவ மன்றத்தினரால் பெரியதோர் பேச்சரங்கை ஒழுங்கு செய்து அப்பாடசாலையைச் சேர்ந்த பல மாணவ, மாணவிகள் சொற்பொழிவாற்றி இன்னிசையும் நல்கினர். அவ்வரங்கிற்கு மாபோலை ஜும்ஆ மஸ்ஜித் பரிபாலன சபையின் தலைவரும் மாபோலை தப்லீக் இயக்கத்தின் அமீருமான ஜனாப் எம். ஏ. எம். வாஹித் தலைமை தாங்க பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஜனாப் ஏ. சி. எம். பாருக் அரங்கின் நிகழ்ச்சியைக் கிரமமாய் நடத்தினார். அவ்வரங்கிலே ஜனாப்களான கே. சி. எப். டீன், எம். நாபி ஆசிரியர், எம். ஐ முஹம்மது தாஜுத்தின் (முஸ்லிம் விவாகப் பதிவுகாரர்) எம். ஐ. எம். சலீம் ஆசிரியர் ஜனாப் எம். ஐ. முகமது தாஜுத்தீன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள்.

ஈற்றில் இ[illegible] முழங்க நார[illegible]டன் முடிவடைந்தது.

### வாலிபர் முன்னேற்றச் சங்கம்

நெடுநிலத்தின் நடுநகராம் மக்காவிலே தன்னந்தனியராக நின்று கொள்கைக் கொடியேந்தி புதுமை புகுத்திய தனிப் பெருந்தகமையாம் முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் பிறந்த மீலாத் விழா கடந்த 5-9-60 அன்று தொட்டவத்தை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தாரால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

விழாவை யொட்டி பள்ளிவாசல் முற்றவெளியில் ஜனாப் சரீபு ஆலிம் தலைமையில் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அறிஞர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையை தெளிவாக எடுத்துரைத்ததுடன் மூதாதையரின் மூடக் கொள்கைகளை ஒழித்து சமுதாயம் மறுமலர்ச்சியடைய வேண்டுமென்றால் முஸ்லிம்கள் இஸ்லாமிய உணர்ச்சியுடன் திட்டம் வகுத்துச் செயலாற்ற வேண்டும் எனக்கூறினர். விழாவில் மாணவர்களின் பேச்சுப் போட்டியும் இடம் பெற்றது.

---

### சிறீசுமன வித்தியாலயத்தில் பாரதி விழா

இரத்தினபுரி சிறீசுமன வித்தியாலய தமிழ்மாணவர் மன்ற சார்பில் அணிமையில் பாரதி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட திரு. பி. ஆர். பெரியசாமி தமது சொற்பொழிவில், பாரதி விழாவைக் கொண்டாடுவதில் மாத்திரம் மாணவர்கள் தங்கிவிடாது பாரதியின் வழியில் சென்று தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார்.

மற்றும் மாணவர்கள் மூ. சிவனடியான், சா. கருப்பண்ணன், க. ஆறுமுகம், லெ. நாச்சமுத்து, மா. இராமசாமி, முதலானோர் பாரதியாரைப் பற்றி எடுத்தியம்பினர்.

விழாவுக்கு செல்வன் மா. தங்கவேல் தலைமை வகித்தார். செல்வன் வெ. முத்துராமலிங்கம் பாரதியின் தமிழ்மொழி வாழ்த்துப் பாடினார்.

---

### அருளொளி நிலையம்

கொழும்பு அருளொளி நிலைய ஆதரவில் சுவாமி சிவானந்தா-கவியோகி சுப்பிரமணிய பாரதி—ஆசாரிய விநோபாவே ஆகிய மூவரினதும் திருநாள் கடந்த 11-9-60-ல் "ஈழநாடு" ஆசிரியர் திரு. கே. பி. அரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டுப் பிரார்த்தனையுடன் விழா ஆரம்பமாயது தலைவர் தமதுரையில் மேற்கண்ட மூன்று பெரியார்களின் சேவைகளையும் அவர்கள் காட்டியுள்ள நெறிகளையும் பற்றி குறிப்பிட்டு, அவை நமது ஆத்மீக சமூக பொருளாதார விடுதலைக்கு வழி காட்டுமென்றார்.

கொழும்பு இந்துவாலிபர் சங்க உபதலைவர் திரு ச. சுப்பையா பேசுகையில் நமது சைவ சமயம் அன்பை அடிப்படையாகக் கொண்டது. சைவ மக்களாகிய நாம் சமய அடிப்படைத் தத்துவார்த்த[illegible] கடந்த கால இன்னல்களுக்கும் இன்றைய சூழ் நிலைக்கும் காரணம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இதிலிருந்து நாட்டின் இன்றைய சூழ்நிலைக்கு ஆத்மீக போதனையே சாலச் சிறந்தது என்பது புலனாகின்றது. நாம் வெறும் விழாக்களிலும் பேச்சுகளிலும் நின்று விடாது, நமது சமய அடிப்படைத் தத்துவார்த்தங்களுக்கமைய நடக்க வேண்டும் என்று கூறினார். திரு. இ புலேந்திரனும் பேசினார். மங்களப் பாடல்களுடன் விழா நிறைவெய்தியது.

---

### வாலிபர் முன்னேற்றச் சங்கம்

வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் விசேட கூட்டமொன்று அதன் காரியாலயத்தில் கடந்த 14-9-60-ல் தலைவர் செ. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது.

உப செயலாளர் ச. சிவரத்தினம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மேற்படி சங்கத்தாரால் அணிமையில் வேலணையில் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் அங்கத்தவர்கள் நடந்து கொண்ட முறையையும் அவர்களது அயராத உழைப்பையும் வெகுவாகப்பாராட்டிப் பேசினார்.

மற்றும்கா. துரைராசா, ச. கோபாலபிள்ளை, க. கா. சிவலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

---

### தனியார் பள்ளிகளை அரசினர் எடுப்பதற்கு கண்டனம்

"மார்க்ஸிய அரசாங்கங்கள் நீங்கலாக எந்த ஒரு ஜனநாயக அரசாங்கமும் தனிமனிதசுதந்திரத்திலொரு போதும் கைவைப்பதில்லை. எனவே ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஜனங்களில் ஒரு பகுதியினரின் கருத்தைத் துச்சமென மதித்து மற்றப் பகுதியினரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய எத்தனிப்பது ஜனநாயக தர்மமல்ல." இவ்வாறு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தத் தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்து தெய்யோவிற்ற கத்தோலிக்க கலவன் பாடசாலை மண்டபத்தில் அணிமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய டாக்டர் பெரேரா குறிப்பிட்டார்.

டாக்டர் பெரேரா மேலும் பேசுகையில், நாட்டு முன்னேற்றத்தில் நாட்டமுள்ள எண்ணற்றத் தியாகிகளையும் கல்விமான்களையும் உருவாக்கி அளித்த பெருமை தனியார் பள்ளிக்கூடங்களையே சாரும். இதை நாடு நன்கறியும். எந்தவகையில் பார்த்தாலும் அரசாங்கப் பள்ளிகளை விட தனியார் பள்ளிகள் மிக உயர்ந்தவையே. அப்படியாயின் தனியார் பள்ளிகளை அரசாங்கம் இச்சித்ததற்கு சுயநலமே காரணமென்பதில் தவறில்லையல்லவா? அங்ஙனமில்லையென்றால் தனியார் பள்ளிகளில் அரசாங்கம் என்ன தான் குறை கண்டு பிடித்து விட்டது? இந்தக் குழப்பகரமான சந்தர்ப்பத்தில் பாரபட்சமற்ற ஒரு கமிஷனை நியமித்து நிலைமையை ஆராய்வதுதான் விவேகமேயன்றி பெரும்பான்மை பேரைச் சொல்லி சிறுபான்மையினரின் உரிமைகளை அலட்சியம் செய்வதன்று என்றும் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பேசிய திரு. ஜே. பீட்டர் குறிப்பிட்டதாவது:

"மதச் சூழ்நிலையுடன் இயங்கும் தனியார் பள்ளிகளே ஒரு குழந்தைக்கு உண்மையான, பூரணமான கல்வியை அளிக்கக்கூடியது. மதபோதனையில்லாத வெறும் ஏட்டுப்படிப்பு ஒரு மாணவனையோ மாணவியையோ நாட்டுப்பற்றுள்ள ஒரு நல்ல பிரஜையாக்க லாயக்கற்றது. தனியார் பள்ளிகள் இதுவரை எத்தனையோ தேசாபிமானிகளையும் கல்விமான்களையும் உருவாக்கி நாட்டுக்கும் உலகத்துக்கும் அளித்துள்ளன. தனியார் பள்ளிகளின் சிறப்பையும் மேன்மையையும் அறிந்ததால்தானே நமது அரசியல்வாதிகளில் பலரும் தங்கள் குழந்தைகளை தனியார் பள்ளிகளுக்கனுப்புகின்றனர் என்றார்.

கூட்ட முடிவில், தனியார் பள்ளிகள் விஷயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கையில் தங்கள் அதிருப்தியை தெரிவிக்கும் இப்பகுதிப் பெற்றோர்களில் கையொப்பமுடன் கூடிய தீர்மானத்தை பிரதமருக்கும் கல்வி மந்திரிக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

### முல்லைத்தீவில் திரு. கு. வ. நினைவு தினம்

"தமிழ் மக்கள் இருள் படிந்த வாழ்வில் ஒளி தரும் விளக்காக விளங்கியவர் கோப்பாய் கோமான் திரு. கு. வன்னியசிங்கம். அப்புக்காத்துப் பரீட்சையில் சித்தியடைந்தபின் அவர் தமது வேலையைத் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் பயின்றார். அன்று தொட்டு இறக்கும்வரை தமிழரசுத் தந்தையின் வழியில் நின்று தமிழினத்துக்காகத் தம்மையே அர்ப்பணித்த தியாகி அவர். அவரின் நினைவு தமிழ் மக்கள் மத்தியில் என்றும் பசுமையாக இருக்கும்"

இவ்வாறு அமரர் திரு. கு. வன்னியசிங்கம் நினைவு விழா முல்லைத்தீவு முற்றவெளியில் 17-9-60-ல் நடைபெற்றபோது உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

"1947-ம் ஆண்டு கோப்பாய் தொகுதி அபேட்சகராக அறிமுகமான திரு. கு. வன்னியசிங்கம் 1959-ம் ஆண்டு வரை அத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மொழியையும் தமிழ் பிரதேசங்களையும் காப்பாற்றி தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் கௌரவிக்கப்பட்ட ஒருவராக விளங்கினார். பாராளுமன்றத்திலும் பொது மேடைகளிலும் தமிழ் மொழியின் பாதுகாவலராக விளங்கிய கோப்பாய் கோமான் முயற்சியே இன்று தமிழினம் ஒற்றுமைப்பட்டதற்கு முக்கிய காரணம். தமிழ் மக்களிடையே ஒற்றுமை; தமிழ் மக்களிடையே சுதந்திர உணர்ச்சி; தீண்டாமை ஒழிப்பு என்பன அவரது அயராத பிரசாரத்தினாலேயே ஏற்பட்டன. தனக்காக வாழாது பிறருக்காக—இலங்கைவாழ் இருபத்தைந்து இலட்சம் தமிழ் மக்களுக்காக வாழ்ந்த கோப்பாய் கோமானை தமிழ் பேசும் மக்கள் என்றென்றும் மதித்து வாழ்வார்கள் என்பது நிச்சயம்" என "புத்தொளி" பேசும் போது குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் இளைஞர்களை தமிழுணர்ச்சி பெறச் செய்து பல இளைஞர்களை எழுத்தாளர்களாக, சிறந்த பேச்சாளர்களாக ஆக்கியவர் திரு. கு. வன்னியசிங்கம் என்றார் 'நாவேந்தன்'.

கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம், வித்துவான் க. சின்னத்தம்பி, திரு எஸ். அரசரத்தினம் ஆசிரியர், திரு ஜி. பி. வின்சென்ட் ஆசிரியர் என்போரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இப்பொழுது வெற்றிகரமாக காட்சியளிக்கிறன்!

**கிங்ஸ்லி** [கொழும்பு] **பிளாஸா** [வெள்ளவத்தை] **நவா** [கும்பனித்தெரு] **வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]

**விஜயா** [மட்டக்களப்பு] **ஸ்ரீகிருஷ்ணா** [திருகோணமலை]

## அண்ணாவின் அறிவுரை:-

இணைபிரியா இதயங் கொண்டவர்கள் நாங்கள். என் தம்பியின் உள்ளத்திலே பிரமிக்கத்தக்க பாசம் தலை தூக்கியது. மயிர் கூச்செறியும் சூழ்நிலையிலே, தலை கொடுக்கும் தம்பியாக மாறிவிட்டான். பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ள முருக்கும் வரலாற்றை உங்களுக்கு நேரில் விவரிக்க மேலே கூறிய தியேட்டருக்கே மாடர்ன் தியேட்டர்ஸ் "தலை கொடுத்தான் தம்பி" படத்தில் வருகிறேம். அப்பொழுது விவரமாக உங்களுக்கு எல்லாம் புரியும்.

வணக்கம்.

**கே. ஆர். ராமசாமி**

## தம்பியின் சபதவுரை:-

என்னைப் பெற்றெடுத்தவள் என் முதல் தாய். நான் பிறந்த பொன்னடு என்னுடைய மற்றெரு தாய். நாட்டைப் பழித்தவன் தேவனுனலும், அவனைத் தப்பிச் செல்ல விட மாட்டேன். தாயின் நெஞ்சத்திலே துயரைக் கொடுத்தவன் உயிரோடு இருக்கக்கூடாது. சூழ்நிலையின் கோளாறல் எரிமலையாய்க் கிளம்பி அன்பு வழி மறந்து ஆத்திர வழியில் நான் செல்லும்போது, அண்ணு என் வாழ்விலே குறுக்கிட்டார்............அண்ணு............அவர்தான் அறிவுக் கடவுள். அன்புத் தெய்வம். அவர் உணர்த்திய சீரிய வழியில் சென்று, அவர் அன்புக்காக தலை கொடுக்கும் தம்பியாகவே மாறிவிட்டேன். புரட்சிகரமான என் வாழ்க்கையை நீங்கள் புரிந்து கொள்வதற்காக, சுற்றுப் பிரயாணமாக நானும் அண்ணுவும் மேலே கூறிய தியேட்டர்களிலே காட்சியளிப்போம். வந்து கேளுங்கள் விரிவான என் வரலாற்றை.

அண்ணு வாழ்க!

வணக்கம்.

**எஸ். எஸ். ராஜேந்திரன்**

**எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி,**




மாலினி-தாம்பரம் லலிதா
எஸ். மனேகர்,
வி. ஆர். ராஜகோபால்,
டி. கே. ராமச்சந்திரன்,
டி. பி. முத்துலட்சுமி, பி. எஸ். ஞானம்,
பேபி உமா



முதலியோர் நடித்த

# தலை கொடுத்தான் தம்பி

டைரக்ஷன்: **டி. ஆர். சுந்தரம்**



திரைக் கதை-வசனம்: **முரசொலி மாறன் எம். ஏ.**

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—ஏ. எல். ராகவன்
ஜிக்கி—பி. சுசீலா—ஜமுனராணி—என். எல். கானசரஸ்வதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, ... டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 அக். 2-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.